
கல்வெட்டு

KALVETTU

திருவள்ளுவர் ஆண்டு 2040 தைத் திங்கள்



25-11-08 அன்று தொல்லியல் துறையின் இணையதளத்தைத் தமிழகக் கல்வித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தொடக்கி வைக்கிறார்

கல்வெட்டு - காலாண்டிதழ் 76 (ஜனவரி 2009) விலை: ரூ. 10.00
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை



25-11-08 உலக மரபு வார விழா நிறைவு நாளில் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு **தங்கம் தென்னரசு** அவர்கள் துறை நூற்களை வெளியிட்டுச் சிறப்பிக்கிறார்கள்



புத்தர் சிற்பம் - சோழர் காலம்
பெருஞ்சேரி



வணிகக்குழுக் கல்வெட்டு
கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு
கோட்டைப்பட்டி

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல்துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை-600008
23-03-2009

பதிப்புரை

'கல்வெட்டு' காலாண்டிதழ் 76 சிறந்த கட்டுரைகளுடன் வெளியிடப்படுகின்றது. இலக்கியங்களும் மக்கள் வாய்மொழிகளும், சிற்பங்களும், கல்வெட்டுகளும், நம் முன்னோர் விட்டுச்சென்ற தொல்பொருட்களும், தமிழகத்தின் வரலாற்றை மறவாது நமக்குக் கூறிக்கொண்டே உள்ளன. இவற்றைப் படிப்பதோடு அல்லாமல் புதிய செய்திகளைப் பல பரிமாணங்களில் பார்த்துச் சரியான விடைக்காண வேண்டும் என்பதையே இங்கு வெளியிடப்பட்டுள்ள பல கட்டுரைகளும் தெளிவாக்குகின்றன.

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களையும், கல்வெட்டுகளையும் சான்றுகளாக்கி 'ஊர்க்கோட்டம்' பற்றி ஒரு கட்டுரை அருமையான விவாதத்தை முன்வைத்துள்ளது. மிக வேகமாக வளர்ந்து நாகரிகத்தின் உயர்வுகளைக் கண்டுவரும் தமிழகத் தலைநகரான சென்னை மாநகர் பண்டைய நாளில் எத்தனை கோயில்களையும், தோட்டங்களையும் கொண்டிருந்தன என்பதை ஒரு கட்டுரை விளக்குகிறது.

வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் தங்குமிடம், கொற்றலையாறு-கள ஆய்வு ஆகிய கட்டுரைகள் தொல்மாந்தரின் வளர்ச்சி நிலையைக் காட்டுவன. உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் சிற்பக்கலை தொடர்பான இருகட்டுரைகள் கலைவளத்தைக் காட்டுவன. இந்திய மொழிகளின் தொன்மைப் பற்றிய கட்டுரை, மொழி, வரலாற்று அறிஞர்களின் ஆய்விற்குச் சிறந்த வழிவகுப்பதாய் உள்ளது.

இவ்விதழ் வெளியிடும் பணியினை மேற்கொண்ட கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்தகல்யாணி மற்றும் உரிய டிடிபி. மற்றும் அட்டை படம் வடிவமைத்த தே. சத்தியவதி ஆகியோருக்கு என் வாழ்த்துகள். பல அரிய வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிய இவ்விதழ் அறிஞர்க்கும் ஆய்வு மாணாக்கர்க்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

உள்ளே.......

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,** அவர்கள் சார்பாக திருமதி அர.வசந்தகல்யாணி, பதிவு அலுவலர்(பொ) அவர்களால் வெளியிடப்பெற்றது.

இணையதளம் www.tnarch.gov.in

மின் அஞ்சல் tnarch@tn.nic.in

1

சிலப்பதிகாரத்தின் ஊர்க்கோட்டம்

(ஒரு புதிய விளக்கம்)

முனைவர் **ஆ. பத்மாவதி**
மேனாள் கல்வெட்டாய்வாளர்
தொல்லியல்துறை, சென்னை-8

சிலப்பதிகாரம் கலைத்திறன் உரைத்த காதையில் 1. அமரர்தருக்கோட்டம், 2. வெள்யானைக் கோட்டம், 3. புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம், 4. பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம். 5. ஊர்க்கோட்டம், 6. வேற்கோட்டம், 7. வச்சிரக் கோட்டம், 8. புறம்பணையான் வாழ் கோட்டம், 9. நிக்கந்தக் கோட்டம், 10. நிலாக் கோட்டம் எனப் பல கோட்டங்கள் கூறப்பட்டுள்ளன.

இக்கோட்டங்களுள் ஒரு கோட்டத்தின் பெயர் ஊர்க்கோட்டம். அதென்ன ஊர்க்கோட்டம்? யானைக் கோட்டத்தில் யானையும், நிலாக்கோட்டத்தில் நிலாவும், புறம்பணையான் வாழ்கோட்டத்தில் சாத்தன் என்னும் இறைவனும் அமைக்கப்பட்டிருந்தது போன்று பிற கோட்டங்களிலும் அமைக்கப்பட்டிருந்தனர் சரி, ஊர்க்கோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது எது? ஊரா? அல்லது வேறொன்றா? இதற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் இறைவன் ஊராகிய கைலாசம் நிற்கும் கோயில் என்று பொருள் கூறியுள்ளனர். இது வலிந்து பொருள் கூறியிருப்பதாகத் தோன்றுகிறதேயன்றி மிகச்சரியான பொருளைத் தந்ததாகக் கருத முடியவில்லை. ஊரைக் குறிக்கும் ஏதோ ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அது என்ன என்பதே கேள்வி.

இறைவன் பெயரைச் சில ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் 'ஊருடைய' என்ற அடைமொழியுடன் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. உதாரணமாக எலவானாசூர் சிவன்கோயில் கல்வெட்டுகள்[1] அவ்வூர் இறைவனை, 'ஊர்பாகங்கொண்டருளிய நாயனார், இவ்வூருடைய மகாதேவர், இவ்வூர் ஊருடைய மகாதேவர், இறையாநரையூர் ஊர் உடைய மகாதேவர் பரமேஸ்வரர், ஊருடைய பரமேஸ்வரர், என்றெல்லாம் கூறுகின்றன. இப்பெயருக்கு விளக்கமளிக்கும் போது இவ்வட்டாரத்திலுள்ள ஊர்களின் வருவாயில் சரிபாதி இவ்விறைவனுக்கு மானியமாக வழங்கிய காரணத்தால் இவர் ஊர்பாகங்கொண்டருளியவர் என்று அழைக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இவ்வூர் ஊருடைய மகாதேவர் என்றும் இறையாநரையூராகிய ஊருடைய மகாதேவர் என்றும் கூறப்படுவதால் இறையாநரையூராகிய இவ்வூரில் ஓர் ஊர் இருந்திருக்கிறது. கோயிலுக்குத் தரப்படும் வருவாய் தொடர்பாக இறைவன் பெயர் அமையாது. எனவே இவ்வூர் கல்வெட்டுகளில் கூறப்படும் 'ஊர்பாகம்' மற்றும் 'இவ்வூர் ஊருடைய' என்பதிலும் வேறு ஏதோ ஒரு பொருள் பொதிந்துள்ளது. அப்பொருள் எது? அவ்வூர் எது?

தேவாரம்

அப்பர் தேவாரங்களில்[2]' வடிவுடைய மங்கை தன்னை மார்பிலோர் பாகத்தானே', 'மாவடுவகிர் கொள் கண்ணாள் மலைமகள் பாகத்தானே', 'மழுவது வலங்கையேந்தி மாதொரு பாகமாகி', 'திருமாலோர் பாகத்தான் காண்' என்றெல்லாம் பாடியிருக்கிறார். மங்கையை, அதாவது மலைமகளை, தமது ஒரு பாகத்தில் வைத்தார் என்பதுடன் திருமாலையும் ஒரு பாகத்தில் வைத்தார் என்பதெல்லாம் சரி, 'ஊர்பாகங்கொண்டருளிய நாயனார்', 'ஊருடைய மகாதேவர்' என்பதை எப்படி பொருள் கொள்வது? மேற்கூறியவாறு, அதாவது ஊர்களின் வருவாயில் சரிபாதியைக் கொண்டவர் என்றுதானே பொருள் கொள்ள முடியும் என்று கேட்கலாம்.

இங்கு 'வடிவுடைமங்கை தன்னை மார்பிலோர் பாகத்தான்' 'மலைமகள் பாகத்தான்' என்பதைப்போல ஊர்பாகங் கொண்டருளியவர் என்பது விளங்குகிறது. ஆதலால், மங்கை மலைமகளுக்கும் ஊருக்கும் ஏதாவது தொடர்பு படுத்த முடியுமா என்று பார்க்கவேண்டும். அவ்வாறு ஆய்வு செய்து ஊர்பாகம் என்பதற்கு விளக்கம் கிடைத்தால் ஊாக்கோட்டத்தின்-புதிரும் விடுபட வாய்ப்பு ஏற்படும்.

இலக்கியங்கள் சில **மங்கை** என்ற பெயரில் சில ஊர்களைக் குறிப்பிடுவது இச்சமயத்தில் நினைவு கூரத்தக்கது. உதாரணமாக, அப்பர் தேவாரத்தில் புள்ளமங்கை, விசயமங்கை என்ற ஊர்களையும், பெரிய புராணத்தில் சாக்கியர் தம் போதி மங்கை, சங்கமங்கை என்ற ஊர்களையும், பாண்டிக்கோவைத்தில் சங்கரமங்கை, மணற்றிமங்கை என்ற ஊர்களையும் குறிப்பிடுகின்றன.

அப்பர் பாடிய **புள்ளமங்கை** என்ற ஊர் அவ்வூர்க் கோயில் கல்வெட்டுகளிலும் செப்பேட்டிலும் **புள்ளமங்கலம்**[3] என்று கூறப்பட்டுள்ளது. அதுபோலவே விசயமங்கையும் கல்வெட்டுகளில் - **விசயமங்கலம்** என்று வழங்கப்பட்டிருக்கின்றது.

விஜயமங்கை

கோவை மாவட்டத்திலுள்ள விஜயமங்கை என்ற ஊரைக் கல்வெட்டுகள் விஜயமங்கலம் என்றே அழைத்திருக்க, அவ்வூர் பற்றிக் கூறும் கொங்கு மண்டல சதகமும் அதிசயமலை விருத்தமும் அவ்வூரை விசையமங்கை என்றும் மங்கையம்பதி என்றும் குறிப்பிடுகின்றன.எனவே இலக்கியங்களும் கல்வெட்டுகளும் முறையே மங்கை என்றும் மங்கலங்கள் என்றும் சில ஊர்களை அழைத்திருக்கின்றன.

கோவை மாவட்ட விஜயமங்கையைக் கொங்குமண்டல சதகங்கள், 'செந்தமிழ் மங்கை' 'வருவிசயமங்கை' என்றும் கூறியதுடன், 'விளைவயல் சூழ் மங்கைப் பத்தினிக் கோட்டம்' என்றும் கூறுகின்றன.

புள்ளமங்கை

ஆக விஜயமங்கலம் என்ற ஊரில் மங்கை என்ற பெயரில் ஒரு அம்மன் கோயில் இருந்திருக்கிறது. அக்கோயில் பத்தினிக் கோட்டம் என்றழைக்கப் பெற்றிருக்கிறது. என்பது புலனாகிறது. இவ்வூரைப் போன்றே மங்கை என்றும் மங்கலம் என்றும் அழைக்கப்பட்ட பிற ஊர்களையும் ஆய்வு செய்வது பயனுள்ளதாக அமையும். அவ்வகையில் புள்ளமங்கை என்ற ஊரிலுள்ள கல்வெட்டுகளை ஆய்வு செய்த போது முதலாம் பராந்தக சோழனின் கல்வெட்டொன்று,

'இவ்வூர் நடுவிற்சேரி திருமணி மண்டகமுடைய காளாபிடாரி'[4] என்ற ஒரு இறைவியைக் குறிப்பிடுகின்றது. ஊரின் நடுவில் அமைந்திருக்கும் திருமணி மண்டகம் என்று மிகச் சிறப்பாகக் கூறப்படுகிறது. அதுபோலவே அல்லூர் ஈசான மங்கலத்துக் கல்வெட்டொன்றும், 'பிடாரி மண்டகமுடையார் கோயில்'[5] என்றொரு கோயிலைக் குறிப்பிடுகிறது. புள்ளமங்கையிலுள்ள மண்டபத்தைப் போன்றதொரு மண்டபம் தான் இதுவும் என்பது தெளிவாகிறது. இம்மண்டபமும் ஊரில் நடுவில் அமைந்ததாக இருக்கலாம்.

பூம்புகாரில் சம்பாபதி என்றொரு அம்மன் கோயில் இன்றும் உள்ளது. இக்கோயிலை மக்கள் பிடாரி கோயில் என்றழைக்கின்றனர். இத்தெய்வத்தைப் பற்றி மணிமேகலைக்கு உரை எழுதிய உ.வே.சா. அத்தெய்வம் கன்னித் தெய்வமாகிய துர்கை என்கிறார். காவிரிப்பூம்பட்டினத்தின் பழைய பெயர் சம்பாபதி என்ற தகவலை மணிமேகலை குறிப்பிடுகிறது.

சம்பாபதி என்ற ஊரின் இறைவி-சம்பாபதி: மதிரை என்ற ஊரின் இறைவி-மதிராபதி, என்று மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களில் புகழ் பெற்ற இவ்வூர்களைப் போலவே மேற்குறிப்பிட்ட ஊர்ப்பெயர்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

புள்ளமங்கலத்தின் பதி - புள்ளமங்கை: போதிமங்கலத்தின் பதி - போதிமங்கை இத்தெய்வங்கள் ஊரின் நடுவே அழகிய மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிகிறது. ஊராக உருவகப்படுத்தப்பட்டவள்தான் மங்கை என்னும் தெய்வம். ஆகவே ஊரே (மங்கலம்) மங்கை; மங்கையே - ஊர், என்பதை அறிய முடிகிறது.

எலவானாசூர் இறைவன் பெயர்-ஊர்பாகங் கொண்டருளிய நாயனார் என்பதைக் கண்டோம். இப்போது மிகத் தெளிவாக நம்மால் பொருள் கொள்ள முடியும். பிற்காலத்தில் இக்கோயில் பெயரை வடமொழியாக்கம் செய்தவர்கள் மிகச்சரியாக,

கிராமார்த்தநாதர்'-என்று வடமொழியாக்கம் செய்திருக்கின்றனர். அர்த்தநாரி உருவிலுள்ள சிவன் தனது இடபாகத்தில் பெண் உருவைத் தாங்கியிருப்பார்.

அர்த்தம்-பாதி நாரி-பெண், அதாவது பாதி உருவம் பெண்ணாக உடையவர் என்பதாகும். அதுபோலவே கிராமம்-ஊர்; அர்த்தம்-பாதி; நாதர்-பாதி உருவத்தை கிராமமாக உடைய இறைவன் அதாவது மங்கையை தன் பாதி உடலில் கொண்டவர் என்று பொருள்.

ஆதலால், இங்கு தமிழில் ஊர் என்றும் வடமொழியில் கிராமம் என்றும் கூறப்படுவது மங்கை என்றும் மலைமகள் என்றும் கூறப்படும் இறைவியைத்தான் எனக் கொள்வது தானே சரியாக இருக்கமுடியும்.

பாடல் கல்வெட்டு

இவ்வூர்க் கோட்டையின் வெளிக் கோபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கி.பி. 15-ஆம் நூற்றாண்டு பாடல் கல்வெட்டு ஒன்று நம் கவனத்தைக் கவருவதாக உள்ளது.

கச்சிநகர் வாழும் கணப்பராயனிறைசை
பச்சையுமை பாகர் ஊர்பாகற்கு-னிச்சயமாக்
கோதற்றவூர் சூற்றியன் குறிச்சி கூடாரை
வாதிக்களித்தான் மகிழ்ந்து[6] - என்பதே அப்பாடல்

இவ்வூர் இறைவன் ஊர்பாகர் பற்றிக் கூறும்போது பச்சையுமைபாகரே ஊர் பாகர் என்று கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

பிடாரி என்ற கல்வெட்டு

புள்ளமங்கலத்தில் மணிமண்டபத்தில் காளாபிடாரி என்ற பெயரிலுள்ள இறைவி இருந்ததாக அல்லவா கல்வெட்டுச் செய்தி கூறுகிறது என்றும் கேட்கலாம். ஆண் தெய்வங்கள்-பட்டாரகர் என்றும் பெண் தெய்வங்கள்-பட்டாரகி என்றும் வழங்கப்பட்டதை முற்காலப் பாண்டியர் காலத்திலும் அதைத் தொடர்ந்த பிற மன்னர்கள் காலங்களிலும் காணமுடிகிறது.

பட்டாரகி என்பதே பிடாரி என்று வழங்கலாயிற்று, ஊர்ப்பிடாரி என்ற வழக்கு மக்கள் மத்தியில் நிலவுவதை இன்றும் காணலாம். ஊர்ப்பட்டாரகி என்பதே பழைய வழக்கு. ஊர்ப்பட்டாரகி-ஊராகிய மங்கையேயல்லவா? எலவானாசூரில் சிவன்கோயிலில் பிடாரியின் சிலைகள் இருப்பதை இன்றும் காணமுடிகிறது.[7]

பத்தினி என்ற கல்வெட்டு

எலவானாசூரில் சோழ மன்னன் ராஜமகேந்திரன் காலக் கல்வெட்டொன்று கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் பத்தினி ஆழ்வார் கோட்டத்தைக் குறிப்பிடுகிறது.[8] இப்பெயரைக் கேட்டதும் விஜயமங்கலத்திலுள்ள இறைவியின் கோயிலை 'விளைவயல்சூழ்' மங்கை பத்தினிக் கோட்டம் என்று அதிசயமலை விருத்தம்

என்ற இலக்கியம் குறிப்பிட்டமை நினைவிற்கு வரும். அதுபோலவே இவ்வூரிலும் பத்தினிக் கோட்டம் இருந்திருக்கிறது. இக்கோட்டத்திலுள்ள பத்தினி, மங்கை என்ற இறைவியேயாவாள் என்பதை நம்மால் விரைவாகப் புரிந்து கொள்ள இயலும்.

மங்கலம்-கிராமம்-ஊர்

மங்கையே மங்கலம் என்ற ஊராக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறாள் என்றாலும் மங்கலம் என்ற சொல் கிராமம் என்பதற்கு அதாவது தமிழில் ஊர் என்பதற்கு பதிலாகக் கூறப்பட்டிருப்பதற்கு நேரடியான சான்றுள்ளதா? என்றும் வினவலாம்.

தஞ்சாவூர் மாவட்டம் கோயில்தேவராயன்பேட்டை என்ற ஊரிலுள்ள கல்வெட்டொன்றில் தமிழ்ப்பகுதியில் ஊரின் பெயர் **கூற்றமங்கலம்** என்றும் சமஸ்கிருதப் பகுதியில் **காலக்கிராமம்** என்றும் கூறப்பட்டிருக்கிறது.[9] காலம் - கூற்றம்; கிராமம் - மங்கலம்; கிராமம் என்பது ஊர் என்று அறிவோம்.

சென்னைக்கருகிலுள்ள மணிமங்கலம் என்ற ஊர்ப்பெயர் சமஸ்கிருதப்பகுதியில் ரத்னகிராமம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.[10] எனவே கிராமமே அதாவது ஊரே மங்கலம் என்று அழைக்கப்பட்டிருந்தது. எனவேதான் எலவானாசூரில் ஊர்ப்பாகங் கொண்டவர்-வடமொழியில் கிராமார்த்தநாதர் என்றழைக்கப்படுகிறார். கிராமத்தைத் தன் உடலில் பாதியாகக் கொண்டவர்.

காமக்கோட்டம்

சுந்தரர் தமது தேவாரத்தில் ஓணகாந்தன் தளி பதிகத்தில் காஞ்சியிலுள்ள காமக்கோட்டத்தைக் குறிப்பிடுகிறார். ஊருக்கெல்லாம் அன்னமிடும் அன்னபூரணியாகிய இறைவியின் கோயிலையே காமக்கோட்டம் என்கிறார்.[11]

சாத்தமங்கலத்திலுள்ள இரண்டாம் நந்திவர்மனின் கல்வெட்டொன்றும் காமக்கோட்டத்தைக் குறிப்பிடுகிறது.[12] தேவாரம் மற்றும் கல்வெட்டிலுள்ள இச்செய்திகள் இரண்டுமே கி.பி. 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பதும், காமக் கோட்டம் பற்றிய மிகப்பழைய தகவல்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பெண் தெய்வக் கோயில் ஏன் காமக் கோட்டம் என்றழைக்கப்பட்டது என்பதற்கு விளக்கம் அறிய வேண்டியது மிகவும் தேவையாகிறது.

சுந்தரர் தமது பதிகத்தில் காமக்கோட்டத்தைக் குறிப்பிடுவதால் அவர் காலத்திற்கு முன்பிருந்தே காமக்கோட்டம் என்ற கோயில் வழிபாடு தொடர்ந்து நிலவியிருக்க வேண்டும். சைவம் தமிழகத்தில் வேரூன்றும் முன்பிருந்த ஒரு சமயத்தின் வழிபாட்டுத் தலமாகவே காமக்கோட்டம் இருந்திருத்தல் வேண்டும். அவ்வாறெனின் பௌத்த, சமண சமயங்களின் தலமாக இருக்கலாம். காஞ்சி காமக்கோட்டத்தைப்

பற்றிச் சிலப்பதிகார மேற்கோள் பாடலும் கூறுகிறது. தற்போதைய காஞ்சி காமக்கோட்டத்தில் நடந்த அகழாய்வுகள் அது ஒரு பௌத்த மையமாக இருந்ததை நிறுவியுள்ளன. சமண பௌத்தர்கள், பிராகிருத, பாலி மொழிகளைத் தங்கள் பயன்பாட்டு மொழியாகக் கொண்டிருந்தவர்கள். எனவே காமக்கோட்டம் என்பது அத்தகையதொரு மொழியின் அடிப்படையில் அமைந்ததாக இருக்கலாம்.

இதுவரை நாம் செய்த ஆய்வின்படி இக்கோட்டம் மங்கைக்கோட்டம், போன்றதொரு கோட்டமாகவே இருத்தல்வேண்டும். பிராகிருத, பாலி மொழிகளிலேயே பௌத்த நூல்கள் எழுதப்பட்டன என்பதால் சமஸ்கிருத மொழியில் வரும் 'ர' என்ற ஒலி அமைப்பு பிராகிருத மொழியில் அமைதியாகிவிடும். ஆதலால் கிராமக்கோட்டமே-காமக் கோட்டமாயிற்று. கல்வெட்டுகள், செப்பேடுகளில் கிராமத்தில் காணியாக நிலம் பெற்றிருந்தவர்களை, கிராமக்காணி என்பதற்குப் பதிலாக, காமக்காணி என்றே கூறப்பட்டிருக்கின்றனர். எனவே காமக்கோட்டம்-என்பதற்குப் பொருள் கொள்ளும்போது என்னவோ ஏதோவென்று மயங்கிவிட வேண்டாம்.

சமஸ்கிருதத்தில்-கிராமக்கோட்டம்; பிராகிருதத்தில்-காமக்கோட்டம்; தமிழில் ஊர்க்கோட்டம். இப்படித்தான் இறைவியின் கோட்டத்தைச் சிலப்பதிகாரம் ஊர்க்கோட்டம் எனக் கூறியிருக்கிறது. இந்த ஊர்க்கோட்டம் பூம்புகாரில் இருந்தது. பூம்புகார் நகரம் சண்பைபதி என்றும் அழைக்கப்பட்டதை சிலப்பதிகாரம் கூறுகிறது. ஆதலால் மதிரையம்பதியின் இறைவி-மதிராபதி என்பது போல சண்பைபதியின் இறைவி சம்பாபதி என்றழைக்கப்பட்டாள்.

ஆகவே, சாயாவனத்திற்கு அருகிலுள்ள இன்றைய சம்பாபதி அம்மன் கோயிலே அன்றைய ஊர்க்கோட்டமாக இருந்திருக்க வேண்டும் இல்லையா? இக்கோட்டத்தைதான் சிலப்பதிகாரம் பிறகோட்டங்களுடன் ஊர்க்கோட்டம் எனக் குறிப்பிடுகிறது என்று கொள்ளலாமல்லவா!

இளங்கோவடிகளுக்குப் பிறகு ஊரின் முக்கிய பெண்தெய்வத்தை 'ஊர்' என்று உருவகப்படுத்திக் கூறுவது தமிழ்க் கல்வெட்டுகளேயல்லவா!

அடிக்குறிப்புகள்

1. S.I.I. Vol. XXII No's 123-179 ஊருடைய பெருமானடிகள் S.I.I. Vol. V No.2 வரலாற்று வடிவங்கள் - புலவர் குப்புசாமி (1976)
2. அப்பர் தேவாரம்
3. S.I.I. Vol. .XIX No. 63. 138. 168. 188
4. Ibid No. 63

5. Topographical list of Inscriptions Vol. III No. 693
6. பழங்காசு இதழ் 12, பக் 16 எலவானாசூர் கோட்டையில் ஒரு பாடல் கல்வெட்டு- ச.கிருஷ்ணமூர்த்தி
7. வரலாற்று வடிவங்கள் .. பக் 47-48
8. ARE 473/1937-38
9. S.I.I. Vol. XIII No. 169
10. S.I.I. Vol. III No. 27
11. 7-ஆம் திருமுறை ஒணகாந்தன்தளி பதிகம்
12 சாத்தமங்கலம் கல்வெட்டுகள் Damilica Vol . I. இரா. நாகசாமி

உதவிய நூல்கள்

1. பெரியபுராணம்
2. பூம்புகார் (நால்வர்) தொல்லியல் துறை வெளியீடு
3. பாண்டிக்கோவை
4. வாலசுந்தரக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம்
5. அதிசயமலை விருத்தம்
6. விஜயமங்கலம் - ஓர் ஆய்வு - ஆ. முருகராஜ்
7. கார்மேகக் கோனாரின் கொங்குமண்டல சதகம்
8. மயிலை சீனி வெங்கடசாமி-பௌத்தமும் தமிழும்
9. வரலாற்று வடிவங்கள் - புலவர் குப்புசாமி
10. சிலப்பதிகாரம்
11. மணிமேகலை
12 பாண்டியர் செப்பேடுகள் பத்து.

2

ஸ்ரீபுரந்தான் - இரு சிவன்கோயில்கள் - ஓராய்வு

ச. பரணன் எம்.ஏ., எம்.பில்.,

காப்பாட்சியர், கங்கைகொண்டசோழபுரம்

பெரம்பலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் ஸ்ரீபுரந்தான் எனும் சிற்றூர் அமைந்துள்ளது. ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீபராந்தக சதுர்வேதிமங்கலம் என்ற பெயருடன் விளங்கிய இவ்வூர் பின்னாளில் மருவி ஸ்ரீபுரந்தான் என்றானது.

மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தில் இவ்வூரில் இரண்டு சிவாலயங்கள் கட்டப்பட்டு அவை முறையே சிவபாதசேகர ஈஸ்வரமுடையார் கோயில், ஸ்ரீகயிலாசமுடையார் கோயில் என்ற பெயர்களுடன் விளங்கின. கி.பி.18-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இரண்டு பெருமாள் கோயில்களும் உள்ளன. இன்று இவ்வூர் ஆலயங்கள் தம் பெருமையிழந்து, வழிபாடின்றி, வௌவால்கள் குடியிருக்கும் கோயில்களாகக் காட்சி தருகின்றன.

சிவபாத சேகர ஈஸ்வரமுடையார் சிவன் கோயில்

தற்போது ஸ்ரீபுரந்தானில் ஓட்டைக் கோயில் என்றழைக்கப்படும் சிவபாத சேகர ஈஸ்வரமுடையார் கோயில் மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி.1184) 6-வது ஆட்சியாண்டில் ஆர்க்காடு கிழான் கண்ணப்பன் திருவையாறு உடையான் ஆன வாணாதிராஜன் என்பவன் கற்றளியாகக் கட்டினான் என்றும், அதே ஆட்சியாண்டில் பிறிதொரு கல்வெட்டில் இறைவன் பெரிய தேவற்குத் திருப்படி மாற்றுக்கு அயிற்காடு கிழான் திருஞானசம்பந்தன் 3 மா நிலம் தானமாக வழங்கியமையும் தெரியவருகிறது. மற்றுமொரு குலோத்துங்கனின் ஆட்சியாண்டு குறிப்பிடாத கல்வெட்டில் காணியுடைய ஸ்ரீகிருஷ்ணன்பட்டன் என்பவனின் மனைவி (ப்ராஹ்மணி) இக்கோயிலில் சந்தி விளக்கொன்று எரிக்க 125 காசு தானமாக வழங்கியுள்ளமை அறியப்படுகிறது.

மூன்றாம் குலோத்துங்கனின் 22-வது ஆட்சியாண்டில் (கி.பி.1200) இக்கோயில் முப்பத்துவட்டத்துக் காணியுடைய சிவபிராமணர்களிடம் இவ்வூர் மணவன கடாந்தகசசேரி இங்கணம் ஆளுடையார் என்பவர் 3 சந்தி விளக்கெரிக்க (திருவாட்டம் தொடங்கி திருவைந்த சாம அறுதி ஆக திருமுந்நே) 400 காசுகளை தானமாக வழங்கியுள்ளமை தெரிகிறது.

ஒரு சந்தி விளக்கெரிக்க 16 ஆண்டுகளில் 8 காசுகள் பொருளாதார ரீதியில் உயர்ந்துள்ளது. கி.பி. 1184ல், 1 சந்தி விளக்கெரிக்க 125 காசுகள். இதுவே கி.பி.1200, 3 சந்தி விளக்கெரிக்க 400 காசுகள். எனவே, 16 ஆண்டுகளில் மேலும் 8 காசுகள் உயர்ந்துள்ளது. மேலும் 1 மா புஞ்சை நிலம் 133 காசுகள் மதிப்புடையதாக தெரிகிறது. எவ்வாறு எனின், பெரம்பலூர் மாவட்டம் சித்தளி (சிற்றளி) வீரபுரீஸ்வரர் கோயில் மூன்றாம் இராஜஇராஜனின் (கி.பி.1221) 5-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில், அவ்வூர் சிவபிராமணர்களிடம் 10 மா புஞ்சை நிலம் தானமாகக் கொடுத்து தினமும் 10 சந்தி விளக்கெரிக்கச் செய்துள்ளனர். எனவே 1 மா புஞ்சை நிலம் 1 சந்தி விளக்கு-133 காசுகள் என்றாகிறது. மற்றும், கருவறையில் எரியும் சந்தி விளக்கினுக்கும், பரிவாரத்தில் எரிவிக்கும் சந்தி விளக்கினுக்கும் வேறுபாடு உள்ளதென்பதை பெரம்பலூர் வட்டம், மருவத்தூர் அழகபுரீயர் கோயில் மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி.1184) 4-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் க்ஷேத்ரபாலப் பிள்ளையாருக்குத் தனியே கோயில் கட்டி, அதில் இரு சந்தி விளக்கெரிக்க 50 காசுகள் தானம் (1 சந்தி விளக்கினுக்கு 25 காசு ஆகிறது) அளித்துள்ளனர். எனவே, கருவறையில் சந்தி விளக்கு எரிப்பதற்கும் (125 காசு) பரிவாரத்தில் சந்தி விளக்கெரிப்பதற்கும் (25 காசு) வேறுபாடு உள்ளது என்பது தெளிவாகின்றது.

மூன்றாம் இராஜஇராஜனின் (கி.பி.1249) 31-வது ஆட்சியாண்டு ஸ்ரீபுரந்தான் ஓட்டைக் கோயில் கல்வெட்டில் இக்கோயில் உடையார் திருச்சிற்றம்பலமுடையார்க்குத் திருப்பாவாடைக்கு ஸ்ரீபராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் காணி உரிமையுடைய பிரளயங்காத்தான் ஆழ்வான் சோழ கங்கதேவன் என்பவன் இறையிலியாக நிலம் கொடுத்துள்ளான். இவ்வாறு முதலாம் இராஜஇராஜனின் சிறப்புப்பெயர்களில் ஒன்றான சிவபாதசேகரன் எனும் பெயரினைக் கொண்டு சிவபாத சேகர ஈஸ்வரமுடையார் சிவன்கோயில் ஸ்ரீபுரந்தானில் கி.பி.13-ஆம் நூற்றாண்டுகளில் உன்னத நிலையில் விளங்கியுள்ளது.

ஸ்ரீகயிலாசமுடையார் சிவன் கோயில்

ஸ்ரீபுரந்தான் ஏரிக்கரை அருகேயமைந்துள்ள மற்றுமொரு சிவன் கோயிலான ஸ்ரீகயிலாசமுடையார் கோயிலும் மூன்றாம் குலோத்துங்கன் மற்றும் பிற்கால பாண்டியர் ஆட்சிக் காலத்தில் சிறப்புடன் விளங்கியதைக் கல்வெட்டுச் செய்திகள் மூலம் காணமுடிகிறது. இக்கோயிலும் சிவபாதசேகர ஈஸ்வரமுடையார் சிவன் கோயிலுக்கு ஒரு சில நூறு அடி தொலைவிலமைந்துள்ளது. இக்கோயிலிலுள்ள [illegible] கல்வெட்டுகளும் தூண்கல்வெட்டுகளாக உள்ளன.

இக்கோயில் இறைவன் இறைவிக்கு, மூன்றாம் குலோத்துங்கனின் (கி.பி.1184) 6-ஆம் ஆட்சியாண்டில் பொன் ஆபரணம் வழங்கியதைக் கூறுகிறது. இறைவன்

ஸ்ரீகயிலாசமுடையாருக்கு திருப்பட்டம் - பொன் 9 கழஞ்சு ¼ பத்து, மாற்றுப்பட்டம் - பொன் 4 கழஞ்சு ¾ பத்து 1 மா, மாற்றுப்பட்டம் - பொன் ¾ கழஞ்சு ¾ மூன்று மஞ்சாடி 6 மா, திருவுத்திரியம் - பொன் 4 கழஞ்சு ½ ஐந்து மா, பிறை - பொன் 1 கழஞ்சு ¼. இறைவி நாச்சியாருக்கு திருத்தோடு (ஓராணையில்) - பொன் 1 கழஞ்சு 9 மாஞ்சாடி 3 மா, கிரிவல உருநாலி - பொன்.... திருவுடையாடை முற்தகடும் பிற்தகடும் - பொன் 52 கழஞ்சு மாற்றுதிருத்தோடு (ஓரணையில்) - பொன் 4 கழஞ்சு ½ ஐந்து மா அளவுகளுடன் கூறப்படும் இக்கல்வெட்டு முழுமையாக இல்லாததால் வழங்கியவன் பெயர் அறிய முடியவில்லை.

பிற்கால பாண்டியர்கள் இப்பகுதியில் ஆட்சிசெய்தபோது, முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி.1312) 44-வது ஆட்சியாண்டில், இக்கோயில் இறைவன், இறைவி, திருவாதவூர் நாயனார் ஆகிய மூவர்க்கும் செப்புத் திருமேனிகளும், பிரதிமமும் (ஏறி அருளப் பண்ணினபடியாலே) பாண்டிமண்டலத்து மதுரை உதய வளநாட்டு அளற்றூர் நாட்டு குளத்தூரான ஜனநாதநல்லூர் உடையான் ஒருவன் செய்வித்துள்ளதைக் கூறுகிறது.

இக்கோயில் திருமண்டபம் (கி.பி.18-ஆம் நூற்றாண்டில்) வீரசூரியன் என்பவனால் எடுப்பிக்கப்பட்டது என்று தூண்கல்வெட்டில் பொறிக்கப்பட்டு உள்ளது.

எனவே, ஸ்ரீபுரந்தானில் அமைந்துள்ள, சிவன் கோயில்களான, சிவபாத சேகர ஈஸ்வரமுடையார் கோயிலும், ஸ்ரீகயிலாசமுடையார் கோயிலும், மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1184) கட்டப்பட்டு, கி.பி.12-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.18ம் நூற்றாண்டு வரை மிகச்சிறப்புடன் விளங்கியுள்ளது என்பதைக் கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையில் அறிகிறோம். மேலும், கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் இரண்டு பெருமாள் கோயில்களும் கட்டப்பட்டுள்ளன. அதில் வேதநாராயணப்பொருமாள் கோயில் கல்வெட்டில், இக்கோயில் அர்த்தமண்டபம், மகாமண்டபம் கட்டுவித்துக் கோயில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகக் கூறுகிறது. மற்றொரு பெருமாள் கோயிலில், கல்வெட்டுகள் ஏதுமில்லை. இப்பெருமாள் கோயில்கள் சிதைந்துள்ளன.

ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்ட ஸ்ரீபுரந்தானில் மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக்காலத்தில் சிறப்புடன் திகழ்ந்த இவ்விரு சிவன் கோயில்களும் மீண்டும் அந்நிலை அடைய வேண்டும்.

◆Ӿ◆Ӿ◆

3

சென்னை நகரில் எத்தனை தோட்டங்கள்

கோ. முத்துசாமி
காப்பாட்சியர்
தரங்கம்பாடி

இன்றைய சென்னை மாநகரானது முன்னாளில் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றூர்களையும் பேரூர்ளையும் திருக்கோயில்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. மேலும் திருக்குளங்களும் ஏரிகளும், ஆறுகளும், கோயில்களும், தோட்டங்களும் நகருக்கு அழகும் பெருமையும் சேர்த்து வந்துள்ளன. அவற்றுள் சில தோட்டங்கள் குடியிருப்புகளாக மாறியதை இங்கு காணலாம்.

தோட்டங்கள் (நந்தவனங்கள்)

முன்னாளில் இங்குள்ள சிவன் கோயில்களுக்கும் வைஷ்ணவ கோயில்களுக்கும் பெருமளவில் நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன. அவை இறைவன் வீதியுலாப்புறப்பாட்டிற்கும், நிவேதனம் செய்து உணவு வழங்கவும் கோயிலில் நந்தவனம் அமைத்துப் பூக்கள் அளித்து வரவும் அக்கால மன்னர்களால் வழங்கப்பட்டுள்ளன என்ற செய்தி மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிற் கல்வெட்டாலும் திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிற் கல்வெட்டாலும் நமக்குத் தெரிய வருகின்றன.

இந்த நந்தவனங்கள் இன்றும் சென்னை நகரில் பல இடங்களில் தோட்டம் என்றும் ஆங்கிலத்தில் கார்டன் என்றும் தற்பொழுதும் மக்களால் வழங்கப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

கபாலி வனபோஜனத் தோட்டம் (கே.வி.பி. கார்டன்)

சென்னை அடையாறு கிரீன்வேஸ் சாலையில் இயல், இசை, நாடக மன்றத்தின் எதிரில் மாநகராட்சியின் பெரிய விளையாட்டு திடல் அமைந்துள்ளது. இந்த விளையாட்டுத் திடலின் மேற்கே அமைந்துள்ளதுதான் கபாலி வனபோஜனத் தோட்டமாகும். முன்னாளில் சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள கபாலீசுவரர் திருக்கோயில் இறைவனுக்கு அணிவிக்கப் பூக்கள் பயிரிடும் தோட்டத்திற்கு தானமாக அளிக்கப்பட்டது இந்த இடம் ஆகும். இவ்விடத்தில் பூக்களைப் பயிரிட்டவர்கள்

குடியிருக்கவும் அவர்கள் உணவிற்கும் திருக்கோயில் மூலமாக வழிவகை செய்யப்பட்டது. எனவே இப்பகுதி "கபாலி வன போஜனத்தோட்டம்" என்றே தொன்று தொட்டு வழங்கி வருகிறது. இந்நாளில் இப்பகுதியைச் சுருக்கமாக கே.வி.பி. கார்டன் என்று அழைக்கின்றனர். தற்போது இப்பகுதியில் பூக்கள் பயிரிடுவது நின்று போய்க் குடியிருப்புகள் மட்டும் உள்ளன.

நாராயணசுவாமி தோட்டம்

சென்னை மந்தவெளியில் அமைந்துள்ள கபாலி வனபோஜனத் தோட்டத்திற்குத் தெற்கில் அமைந்துள்ளது நாராயணசுவாமி தோட்டமாகும். மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலுக்குக் கிழக்கில் அமைந்துள்ள மாதவ பெருமாள் கோயில் இறைவனாகிய நாராயணனுக்கு மலர்கள் வழங்க அமைக்கப்பட்ட நிலமே "நாராயணசாமித் தோட்டம்" என்று தற்போதும் அழைக்கப்படுகிறது. இப்பகுதியிலும் பூக்கள் பயிரிடுவது நின்று போனது. பெயர் மட்டும் வழக்கிலுள்ளது.

ஆண்டி மானியத் தோட்டம்

மந்தவெளி பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ளது ஆண்டி மானிய தோட்டம் ஆகும். முன்னாளில் சிவன் கோயில்களுக்கும் வைஷ்ணவ கோயில்களுக்கும் வரும் அடியார்கள் தங்கியிருப்பதற்காகவும் அவர்கள் உணவு அருந்துவதற்காகவும் கொடையாக வழங்கப்பட்டதால் இப்பகுதிக்கு "ஆண்டி மான்ய தோட்டம்" என்ற பெயர் வழங்கப்பட்டது. இந்நாளில் இப்பெயர் மருவி, "ஆண்டிமாந்தோட்டம்" என்று வழங்கப்படுகிறது.

பல்லக்கு மானியத் தோட்டம்

மயிலாப்பூரின் ஒரு பகுதியாக அதனை அடுத்து வடக்கிலுள்ள லஸ் பகுதி விளங்குகிறது. லஸ்ஸில் உள்ள காமதேனு திரையரங்கின் பின்புறம் உள்ள பகுதிக்கு, "பல்லக்கு மானியத் தோட்டம்" என்று பெயர் வழங்கி வருகிறது. முன்னாளில் மயிலாப்பூர் சிவன் கோயிலில் அறுபத்து மூவர் போன்ற பல திருவிழாக்கள் ஆண்டு தோறும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. அக்காலங்களில் இறைவன்-இறைவி திருமேனிகளை அலங்கரித்து வீதி உலா எழுந்தருளிச்செய்தனர். அவை பல்லக்குகளில் ஏறி, மக்கள் காணும் வகையில் வீதி உலா வந்தன. இந்தப் பல்லக்குகளைத் தூக்குவதற்கு நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் நிலையாக தங்கியிருப்பதற்குத் திருக்கோயில் மூலம் மானியமாக வழங்கப்பட்ட இடமே தற்போதும் "பல்லக்கு மானியத் தோட்டம்" என்ற பெயரில் வழங்கி வருகிறது. தற்போது பல்லக்குகள் அழிந்துவிட்டன. பல்லக்கு சுமப்பவர்களும் வேறு தொழிலுக்குச் சென்று விட்டதால் அவ்விடம் குடியிருப்பாகவும் வணிக வளாகமாகவும் மாறிவிட்டன.

மயில் தோட்டம்

மயிலாப்பூர் கபாலீஸ்சுவரர் கோயிலுக்குக் கிழக்கில் உள்ள சித்திரக்குளத்தை ஒட்டிய பகுதிக்கு மயில் தோட்டம் என்று பெயர். முன்னாளில் இப்பகுதியில் தோட்டம்

அமைத்து அங்கு திருக்கோயில் சார்பாக மயில்கள் வளர்க்கப்பட்டன. அன்னை உமாதேவி மயில் உருவாக வந்து இறைவனை ஆர்ப்பரித்து வழிபட்ட இடமே மயில்+ஆர்ப்பூர் என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது. அதுவே தற்போது மயிலாப்பூர் என்று அழைக்கப்படுகிறது. எனவே இக்கோயிலுக்கு மயில்கள் வளர்க்கப்பட்ட இடம் மயில் தோட்டம் என்று வழங்கப்பட்டமை தெரிகிறது.

குயில் தோட்டம்

மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் தேவாலயத்துக்கு மேற்கில் அமைந்த பகுதிக்கு, "குயில் தோட்டம்" என்று பெயர். முன்னாளில் இப்பகுதியில் நெய்தலங்கானல் சோலைகள் மிக்கு இருந்தன. கடற்பகுதியும் கோயில் தோட்டப்பகுதியும் அருகருகே செழித்து வளர்ந்திருந்தன. எனவே இப்பகுதியில் குயில்கள் வந்து தங்கி இனிய கீதம் பாடின. எனவே இப்பகுதிக்கு, "குயில் தோட்டம்" என்ற பெயர் வழங்கியுள்ளது.

ரோகிணி தோட்டம்

மந்தவெளிக்கு கிழக்கில் கிரீன்வேஸ் சாலையை ஒட்டி வடக்கில் காவலர் குடியிருப்பு அமைந்துள்ளது. அப்பகுதிக்கு, "ரோகிணித்தோட்டம்" என்று பெயர். 27 நட்சத்திரங்களில் ஒன்றான ரோகிணி நட்சத்திரத்தின் பெயரில் இப்பகுதிக்கு ரோகிணி தோட்டம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மக்கள் இப்பகுதியை, "ரோகிணி கார்டன்" என்று அழைக்கின்றனர்.

பீமண்ணா கார்டன்

சென்னை ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ளது, "பீமண்ணாத் தோட்டம்" என்று வழங்கப்படுகிறது. இப்பகுதியும் ஒரு வைணவக் கோயிலுக்குப் பூந்தோட்டத்திற்காக தானம் அளித்த பகுதியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கீழ்ப்பாக்கம் கார்டன்

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு வடக்கிலுள்ளது கீழ்ப்பாக்கம் கார்டன் இப்பகுதி முற்காலத்தில் ஒரு சிவன் கோயிலுக்கு தானமாக அளிக்கப்பட்ட தோட்டமேயாகும். ஆங்கிலேயர் காலத்திலிருந்து, "தோட்டம் என்பவை கார்டன்" என்று மக்களால் அழைக்கப்பட்டன அப்பகுதிகளில் இதுவும் ஒன்றாகும்.

போயஸ் தோட்டம்

சென்னை தேனாம்பேட்டையில் ஸ்டெல்லாமேரி கல்லூரிக்குப் பின்புறத்தில் அமைந்துள்ளது, "போயஸ் தோட்டம்" என்று அழைக்கப்படுகிறது. நகரின் நடுவில் அமைந்துள்ள இப்பகுதிக்கு ஏன் அப்பெயர் வந்தது என்பது ஆய்வுக்குரியது.

இவ்வாறு சென்னை மாநகரில் பல இடங்களில் திருக்கோயில்களுக்கு மலர்கள் அளிக்கவும், இறையடியார்கள் தங்கி உணவருந்தவும் திருக்கோயில் பணியாளர்கள் தங்கி இருப்பதற்கும் முற்காலத்தில் மன்னர்களால் திருக்கோயில்களுக்கு நிவந்தமாக அளிக்கப்பட்ட இடங்களே, “தோட்டங்கள்” என்ற பெயரில் வழங்கி வந்தன என்றும் அவை காலப்போக்கில் பெயர் மாறி குடியிருப்புகளாக ஆகிவிட்டன என்றும் சில இடங்கள் ஆங்கிலேயர் ஆட்சியில், “தோட்டம் என்பது கார்டன்” என்று வழங்கப்பட்டன என்றும் நமக்கு தெரிய வருகிறது. கட்டுரையில் குறிப்பிடப்பட்டவையன்றி சென்னை நகரில் மேலும் பல இடங்கள் இருக்க வாய்ப்பு உண்டு என்பதும் அறிய முடிகிறது.

மேலமங்கைநல்லூர் சிவன்கோயில்

நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் மங்கைநல்லூர் எனும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூர் மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில் 8 கி.மீ. தொலைவிலும் வீரசோழன் ஆற்றின் மேற்கரையிலும் அமைந்துள்ளது. இவ்வூரின் பெரும்பகுதி மேலமங்கைநல்லூர் என்று அழைக்கப்படுகிறது. திரு. பாபு என்பவர் அளித்த தகவலின் பேரில் ஆய்வு செய்தபோது மேலமங்கைநல்லூரில் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த கருங்கற்கோயிலும் கல்வெட்டுகளும், சோழர்காலச் சிற்பங்களும் கோயில் தெற்கே திருக்குளமும், வடக்கே அக்ரகாரமும் இருந்துள்ளன என்று அறியப்பட்டது.

ஆனால் இப்போது திருக்குளம் மட்டும் உள்ளது. துர்க்கை அம்மன், பைரவர் போன்றவை ஆலமரத்தடியில் உள்ளன. அக்ரகாரமும் சிவன் கோயிலும் அழிந்துவிட்டன. இடிந்த கோயிலை கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் ஊரின் நடுவில் அமைந்த ஊருணிக் குளத்தின் தெற்கே சிறிய அளவில் கட்டியுள்ளனர். அதுவும் நிறைவு பெறவில்லை மூலத்தான இலிங்கம் தரையில் ஒரு மூலையில் கிடக்கிறது. சண்டேசுவரர், அம்மன் சிற்பங்கள் தனியே நிறுத்தப்பட்டுள்ளன. இக்கோயில் கருவறையில் வினாயகர் அமர்ந்துள்ளார். எனவே இதனை ஊரார் பிள்ளையார் கோயில் என்றே தற்போது குறிப்பிடுகின்றனர்.

கோயிலின் சுவரின் மூன்று பக்கமும் சோழர் காலக் கல்வெட்டுகள் உள்ளன. அவை ஒழுங்கற்ற நிலையில் இடம் மாறியும் சில பகுதிகள் தலைகீழாவும் உள்ளன. கல்வெட்டு முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் அவனுக்குப் பின் வந்த அரசர்கள் காலத்திலும் வெட்டப்பட்டுள்ளன. இக்கோயிலக்கு நிவேதனம் செய்யவும், இறைவன் திருவிழாக்களில் வீதியுலா புறப்பாடு நடைபெறவும், கோயிலில் நந்தா விளக்கு எரியவும் சொழர்கள் நிலக்கொடையும், பொற்காசுகளும் தானமாக அளித்த செய்தியும் ஊர் சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டதும் தெரிய வருகின்றன.

பழைய கோயில் இடிந்து சிதைந்ததால் மேல் பகுதியைப் பிரித்து வந்து இங்கு மீண்டும் கோயில் கட்டியுள்ளனர். அதன் அடிப்பகுதியைப் பிரித்து எடுத்துச் சென்று தெற்கே அய்யனார் கோயில் கட்டிவிட்டனர். ஊரின் வடக்கே உள்ள ஒரு திடலில் பழைய சிவலிங்கம் தனியே நட்டு வைக்கப்பட்டுள்ளது. கரும்பு வயலில் ஒரு இலிங்கம் கிடக்கிறது. பத்தாம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பெரிய சிவன் கோயிலின் பெயரும் தெரியவில்லை. உருவம் மாறி பிள்ளையார் கோயில் ஆகி அதுவும் மரம், செடிகள் வளர்ந்து அழியும் நிலையில் உள்ளது. ஊரார் மீண்டும் திருப்பணிகள் செய்து புதுப்பிக்கத் திட்டமிட்டு உள்ளனர்.

கோ. முத்துசாமி, காப்பாட்சியர்

4

GUDIYAM CAVE – A PREHISTORIC SHELTER

LAND MARK TO KNOW

S. SREEKUMAR,
Technical Assistant.

The mode of life of prehistoric men was very simple and they led a nomadic life, as they were uncivilized to know building a house or shed to live in. However, they housed themselves in natural caves which provided protection to them from natural calamities. Among the three prehistoric cultural periods, Palaeolithic period (1,00,000 year B.p) men took hunting wild animals with crude stone implements as their main occupation and lived in natural cave or caverns. Such caves are located in many parts of India. But, in Tamilnadu prehistoric cave are mainly spotted in the hillocks located near Gudiyam village. Tiruvallur taluk, District of Tiruvallur.

As far as the State of Tamilnadu is concerned palaeolithic sites are found abundant in and around Poondi reservoir. Tiruvallur taluk, District of Tiruvallur. Among the sites, Gudiyam village, situated at 15km from Attirampakkam which is type area of Madras Hand axe Industry, is an important palaeolithic site. In the nearby hillocks (Alicoor hill) few natural caves which are named after this village as **"Gudiyam Caves"** are located. Nearly sixteen caves are located here.

The biggest cave found here is called as **"Manathacchamman Kovil"** where local people throng on auspicious days to worship the goddess, the local deity and part with her blessing. The dimension of this huge cave is approximately measured to be 35 to 40 ft. in height and 50ft. in breadth. More than hundred men can take shelter under this colossal cave. It is indeed, an adventurous task for anyone to reach this cave, as the seven km. narrow path leading from Gudiyam village, is lined up with bushes and thorn shrubs. But, other caves are not easily approachable as they are comparatively situated at higher altitudes. The occurrences of conglomeratic quartzite which is the source rock for making palaeolithic implements

viz handaxes, cleavers, choppers, scrappers, and discoids, is noticed in the entire area. These type of implements are found at many sites in France, Africa, Spain, England, Hungary, Belgium, China, Burma, Java, North Afghanistan and Iran.

The scattered occurrences of palaeolithic implements in and around this natural cave throw light that this cave was frequently occupied by the palaeolithic period men as their shelter. This fact has well been attested by the yielding of Palaeolithic tools in the excavation conducted at three sites near the Gudiyam cave by Dr. K.D.Banerji, Archaeological Survey of India, during the year 1962-63.

This place with its archaeological importance attracts scholars from all parts of the world to this part of Tamilnadu. It is understood beyond doubt that one who visits this cave will certainly part with knowledge on social life of palaeolithic men. For the benefit of public and scholars, a prehistoric Museum (under the State Dept of Archaeology) with good number of archaeological collections viz palaeolithic stone implements, mircrolithic, tools Neolithic celts, Megalithic urns etc, has been functioning, near Poondi reservoir, Tiruvallur taluk, District of Tiruvallur, State of Tamilnadu. ◆

அரிகரன்கூடலில் டென்மார்க் நாட்டு நாணயங்கள்

நாகை மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள இலுப்பூர் கிராமத்தில் அரிகரன்கூடல் அமைந்துள்ளது. இங்குள்ள தொன்மைத் தடயங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது கோயிலில் இருந்த பழைய திருநீறு மாடத்தில் நான்கு பழைய காசுகளும் ஒரு வெள்ளி மோதிரமும் கிடைத்தன.

நான்கு காசுகளில் இரண்டு டேனிஷ் காலச் செம்பு நாணயங்கள் ஆகும். அவற்றில் ஒன்று ஏழாம் கிருஷ்ட்டியன் காலத்திலும் மற்றொரு காசு கி.பி.1810-லும் வெளியிடப்பட்டுள்ளது. டெனமார்க் நாட்டின் கி.பி.1600ல் தமிழ்நாட்டிற்கு வந்து அப்பொழுது தஞ்சையை ஆட்சி செய்த ரகுநாத நாயக்கரிடம் தரங்கம்பாடிக் கடற்கரைப் பகுதியில் கோட்டை அமைத்துக் கொண்டு அங்கு தங்கி அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வியாபாரம் செய்து கொள்ள அனுமதி பெற்றனர். அவர்கள் கி.பி. 1825 வரை இப்பகுதியில் வாணிகமும் ஆட்சியும் செய்துள்ளார்கள்.

மூன்றாவது காசு டேனிஷ்காரர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர் ஆட்சியில் விக்டோரியா மகாராணி காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 1880 என்று பொறிக்கப்பட்டுள்ளது. காசில் விக்டோரியா மகாராணியின் உருவமும் காட்டப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சியும் அக்காலக் காசுகளும் இப்பகுதியில் புழக்கத்தில் இருந்தது தெரியவருகிறது.

நான்காவது காசு உருது எழுத்துப் பொறித்த வெள்ளிக் காசு. இதுவும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்பட்டது. வெள்ளி மோதிரம் ஒரு பகுதி வளயம் உடைந்துள்ளது. அதன் மேல் எழுத்துகள் ஏதும் இல்லை.

கோ. முத்துசாமி, காப்பாட்சியர்

5

சிற்பக் கை அமைதிகள்

கணினி வழி வரைவு - ஒரு புதிய முயற்சி

ம. அருண்,
ஸ்தபதி,
தொல்லியல் துறை

படிமக் கலையில் 32 வகையான கை அமைதிகள் உள்ளன. இவற்றை சிற்பக் கலையில் முத்திரைகள் என்று கூறுவர். கை அமைதிகளை "தொழிற்கை" மற்றும் "எழிற்கை" என இரு வகைகளாக நூலோர் கூறுகின்றனர். ஒரு கருத்தினை உணர்த்த - அசைக்கும், அபிநயிக்கும் கையானது தொழிற்கை என்றும், எக்கருத்தினையும் வெளிப்படுத்தாமல் படிமத்தை சமநிலைப்படுத்தவும், எழிலூட்டவும் அமைக்கப்படும் கை எழிற்கை எனவும் அழைக்கப்படும்.

தொழிற்கைகள் 28 வகைப்படும். அவை முறையே

ஒற்றைக் கைகள்: (24)

1) அபய ஹஸ்தம்
2) வரத ஹஸ்தம்
3) கடக ஹஸ்தம்
4) சிம்மகர்ண ஹஸ்தம்
5) வியாக்யான ஹஸ்தம்
6) சூசி ஹஸ்தம்
7) திர்ஜனீ ஹஸ்தம்
8) கர்த்தரீமுக ஹஸ்தம்
9 அலபத்ம ஹஸ்தம்
10) விஸ்மய ஹஸ்தம்
11) பல்லவ ஹஸ்தம்
12) நித்ரா ஹஸ்தம்
13) அர்த்த சந்திர ஹஸ்தம்
14) அர்த்தபதாக ஹஸ்தம்
15) தரிசூல ஹஸ்தம்
16) முஷ்டி ஹஸ்தம்
17) சிகர ஹஸ்தம்
18) பூ ஸ்பரிச ஹஸ்தம்
19) கடி ஹஸ்தம்
20) ஊரு ஹஸ்தம்
21) ஆலிங்கன ஹஸ்தம்
22) தனுர் ஹஸ்தம்
23) டமரு ஹஸ்தம்
24) தாடன ஹஸ்தம்

இரட்டைக்கைகள் : (4)


1) அஞ்சலி ஹஸ்தம்
2) தியான ஹஸ்தம்
3) புஷ்பபுட ஹஸ்தம்
4) தர்மசக்கர ஹஸ்தம்

எழிற்கைகள் : (4)

1) கஜ ஹஸ்தம்
2) தண்ட ஹஸ்தம்
3) டோல ஹஸ்தம் (லம்ப ஹஸ்தம்)
4) பிராசாரித ஹஸ்தம்

தொழிற்கைகள்

1) அபய ஹஸ்தம்




கைச் சுட்டு விரல் முதல் சிறு விரல் வரை நான்கு விரல் களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்து, கைமட்டத்திற்கு சம மட்டத்தில் செங்குத்தாக மேல் நோக்கி நிறுத்திப் பெருவிரலைச் சுட்டுவிரலோடு மேல் நோக்கி அமைக்கும் கை அமைதிக்கு '**அபய ஹஸ்தம்**' என்று பெயர்.

2) வரத ஹஸ்தம்




அபய ஹஸ்தத்தை தலைகீழாகப் பிடிப்பின் அது '**வரத ஹஸ்தம்**' எனப்படும். இது தொங்கும் கரமானதால் கைத் தலமும், விரலும் கனிவை உணர்த்தும் வகையில் குழைவுடன் அமைத்தல் வேண்டும்.

3) கடக ஹஸ்தம்




மேற்கணுக்களை சிறிது வளைத்துப் பிடிக்கும் கை '**கடக ஹஸ்தம்**' எனப்படும். இதன் புறத்தோற்றம் நண்டின உருவத்தை ஒத்திருப்பதால் இக்கை '**கடக (நண்டு) ஹஸ்தம்**' என அழைக்கப்படுகிறது. சிற்பப் படிமங்களில் பாசம், அங்குசம், தண்டம், கத்தி, அம்பு போன்ற ஆயுதங்களைப் பிடிப்பதற்கு பெரிதும் பயன்படுகிறது. ஆயுத மின்றியும் இம்முத்திரை சிற்பங்களில் அமைக்கப்படுவதுண்டு.

4) சிம்மகர்ண ஹஸ்தம்




ஏறத்தாழ கடக முத்திரை போன்றே அமைந்திருக்கும் இம்முத்திரை **'சிம்மகர்ண (சிங்கத்தின்செவி) ஹஸ்தம்'** எனப்படும். வாவென்று அழைக்கும் அமைதியை இக்கரம் உணர்த்தும்.

5) வியாக்யான ஹஸ்தம்




பெருவிரல் கைத்தலத்தை விட்டுப் பிரிந்து முன்னோக்கி நீண்டு நிற்க, சுட்டு விரலானது வளைந்து பெருவிரல் நுனியைத் தொட்டு வளையம் போன்று அமைத்து, நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் ஆகியவற்றை இவ்விரு விரல்களைவிட்டுப் பிரித்து மேல் நோக்கியதாய் அமைத்தல் வேண்டும். தத்துவ விளக்கம் செய்யும் குறிப்பை உணர்த்துவதால் இதனை **'வியாக்யான ஹஸ்தம்'** என்றும் **'சின் முத்திரை'** என்றும் அழைப்பர்.

6) சூசி ஹஸ்தம்




கடக முத்திரையில் சுட்டு விரலை செங்குத்தாக நிறுத்தி யமைத்தல் **'சூசி ஹஸ்தம்'** ஆகும்.

7) தர்ஜனீ ஹஸ்தம்




தர்ஜனீ முத்திரையானது சூசி முத்திரையைப் போன்றே என்றாலும், சுட்டு விரலும், கைத்தலமும் சற்றே பின்னடங்கிச் சாய்ந்து அச்சுறுத்தும் தன்மையை உணர்த்துவதாக அமையும். தர்ஜனீ என்ற சொல்லுக்கு அச்சுறுத்தல் என்று பொருள்.

8) கர்த்தரீமுக ஹஸ்தம்




அணிவிரலும் பெருவிரலும் உள்ளங்கையில் முன் புறத்தே நெருங்கி அமைய, சிறுவிரலானது செங்குத்தாக நிமிர்ந்தோ அல்லது சற்று வளைந்தோ இருக்கும். சுட்டுவிரலும் நடுவிரலும் செங்குத்தாக நிமிர்ந்து, நடுவிரல் முன்னோக்கியும் சுட்டுவிரல் பின்னோக்கியும் விரிந்து கத்தரிக்கோல் போல் அமைவதால் இதனை **கர்த்தரீமுக ஹஸ்தம்** என்பர். கடவுள் படிமங்களில் பெரும்பாலும் மேற்கரங்களில் இம்முத்திரை காணப்படும்.

9) அலபத்ம ஹஸ்தம்



இம்முத்திரையில் எல்லா விரல்களும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து, விரிந்த தாமரை மலர் போல் தோற்றம் தரும். இம் முத்திரையில் கைத்தலம் மேல் நோக்கி அமையும். துவாரபாலகர் படிமங்களில் இம்முத்திரையைக் காணலாம்.

10) விஸ்மய ஹஸ்தம்




அலபத்ம முத்திரையைச் செங்குத்தாக அமைத்து, காண்போர்க்கு புறங்கை தெரியப் பிடித்து காட்டுவது **' விஸ்மய ஹஸ்தம்'** எனப்படும். இது ஆச்சர்யத்தை உணர்த்தும் முத்திரை.

11) பல்லவ ஹஸ்தம்




ஐந்து விரல்களை விரித்து நீட்டி உள்ளங்கை உள்முகமாகவும், புறங்கை வெளி முகமாகவும் அமைய, மணிக்கட்டிலிருந்து இலைப் போல் கீழ் நோக்கி மடிந்து தொங்கும் கை அமைதியை **'பல்லவ ஹஸ்தம்'** என்பர். ரிஷபாந்திகர் மற்றும் இராஜ கோபாலன் படிமங்களில் இதனைக் காணலாம்.

12) நித்ரா ஹஸ்தம்




இது ஆசனத்தில் ஊன்றிய கை அமைதியாகும். அபய முத்திரையோடு கூடிய கையை ஆசனத்தில் படுக்கையாக வைத்த நிலையில் இம்முத்திரை அமையும். இது உறக்க நிலையை உணர்த்துவதால் **'நித்ரா ஹஸ்தம்'** எனப்படும். சோமாஸ்கந்தப் படிமத்தில் உமா தேவியின் இடது கரம் இவ்வாறு இருப்பதைக் காணலாம்.

13) அர்த்தசந்திர ஹஸ்தம்




சுட்டுவிரல் முதல், சிறுவிரல் வரை உள்ள நான்கு விரல்களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்துக் கட்டைவிரலை அவற்றினின்றுப் பிரித்து, விரைப்பாக எதிர்ப்புறம் நீட்டி அமைப்பது **'அர்த்தசந்திர ஹஸ்தம்'** ஆகும். நடராஜர் படிமத்தில் இடது மேற்கரம் தீச்சுடர் ஏந்திய நிலையில் இம்முத்திரை அமைந்திருக்கும்.

14) அர்த்தபதாக ஹஸ்தம்




சுட்டுவிரலையும் நடுவிரலையும் விரித்து நீட்டி மற்ற விரல்களை முன்னோக்கி மடக்கி, கைத்தலத்தையும் பெருவிரலையும் செங்குத்தாகப் பிடித்து அமைத்தல் **'அர்த்தபதாக ஹஸ்தம்'** ஆகும். இம்முத்திரையை மத்துவாச்சாரியின் திருவுருவில் காணலாம்.

15) திரிசூல ஹஸ்தம்




கைத்தலத்தையும் பெருவிரலையும். செங்குத்தாக நீட்டி, நிறுத்தி, சிறுவிரலையும் பெருவிரலையும் கைத்தலத்திற்கு முன்புறம் கொணர்ந்து மடக்கி ஒன்றையொன்று தொட்டிருக்க மற்ற மூன்று விரல்களும் மேல் நோக்கி நிமிர்ந்து நிற்கச் செய்து அமைப்பது **'திரிசூல ஹஸ்தம்'** எனப்படும். இதனைத் திருவள்ளுவர் படிமத்தில் காணலாம்.

16) முஷ்டி ஹஸ்தம்




கட்டைவிரல் தவிர, பிற விரல்களை மடக்கி உள்ளங்கையோடு சேர்த்து இறுகப் பிடித்து நடுவிரல் மீது பெருவிரலைப் பொருத்தி அமைக்கப்படும் முத்திரை **'முஷ்டி ஹஸ்தம்'** எனப்படும். இது தண்டம், வாள் ஆகிய ஆயுதங்களை இறுக்கிப் பிடிக்கும் நிலையைக் காட்டுவதாகும்.

17) சிகர ஹஸ்தம்




பெருவிரல் தவிர மற்ற விரல்களை ஒருசேர மடக்கி உள்ளங் கையோடு சேர்த்து இறுகப் பிடித்துப் பெருவிரலைச் செங்குத்தாக நிறுத்தி அமைத்தல் **'சிகர ஹஸ்தம்'** ஆகும். இது வில்லை பிடிக்கும் கரமாகும்.

18) பூஸ்பரிச ஹஸ்தம்




பல்லவ முத்திரையை பூமியை நோக்கித் தொடுமாறு அமைத்தல் **'பூஸ்பரிச ஹஸ்தம்'** ஆகும்.. இதனை புத்தர் படிமத்தில் காணலாம்.

19) கடி ஹஸ்தம்




கைத்தலத்தையும் விரல்களையும் விரித்து, கட்டை விரலை இடுப்பில் படுவதாக ஊன்றி, மற்ற விரல்களை ஒன்றோடொன்று சேர்த்து இணைத்து இடுப்பில் படியுமாறு வைத்து, சிறுவிரலையும் சுட்டுவிரலையும் சற்று உயர்த்தி அமைத்தல் **'கடி ஹஸ்தம்'** எனப்படும்.

20) ஊரு ஹஸ்தம்



கையைக் கீழ் நோக்கி நேராக நீட்டிக் கைத்தலத்தையும் விரல்களையும் தொடை மீது பொருத்தி மென்மையாக ஊன்றியிருக்கும் நிலை **'ஊரு ஹஸ்தம்'** எனப்படும். நடுவிரலும், அணிவிரலும் தொடையில் நளினமாய்ப் பதிந்து அமைய, சுட்டுவிரலும், சிறுவிரலும் தொடையைவிட்டு நீங்கி இதமாக வளைந்து, கட்டைவிரலானது மற்ற விரல்களிலிருந்து விலகித் தொடையோடு பொருந்தியிருத்தல் வேண்டும். விஷ்ணு மற்றும் கந்தன் படிமத்தில் இதனைக் காணலாம்.

21) ஆலிங்கன ஹஸ்தம்



சுட்டுவிரல் முதல் சிறுவிரல் வரை உள்ள விரல்களை ஒன்றோடொன்று நெருங்கியதாக அமைத்து, சுட்டுவிரலையும், சிறு விரலையும் சிறிது மேல் நோக்கி உயர்த்தி, கட்டைவிரலை கைத்தலத்திலிருந்து பிரித்துச் செங்குத்தாக்கி, தேவியின் உடலை அணைத்தவாறு அமைப்பது **'ஆலிங்கன ஹஸ்தம்'** ஆகும். உமா சந்திரசேகர மூர்த்தத்திலும், லக்ஷ்மி நாராயணர் படிமத்திலும் இதனைக் காணலாம்.

22) தனுர் ஹஸ்தம்



கைத்தலத்தை உட்புறமாகத் திருப்பி, நடுவிரலையும் அணி விரலையும் சேர்த்து, வில்லின் மீது படியச் செய்து, சுட்டு விரலையும் சிறுவிரலையும் சற்று மேல் நோக்கி உயர்த்தி, சிறிது வளைத்துப் பெருவிரலைக் கைத்தலம் பார்த்தவண்ணம் மடக்கி, விரல் நுனி வில்லினை தொட்டவாறு அமைத்தல் **'தனுர் ஹஸ்தம்'** எனப்படும். திரிபுராந்தகர் மற்றும் கோதண்டராமர் படிமத்தில் இவ்வமைதியினைக் காணலாம்.

23) டமரு ஹஸ்தம்



விரல்களையும் கைத்தலத்தையும் விரித்து, நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடொன்று நெருக்கியமைத்து, கைத்தலத்தை நோக்கி வளைத்து, கட்டைவிரலை டமருகத்தை நோக்கி வளைத்து, சிறுவிரலைச் செங்குத்தாக்கி சிறிதே முன்புறம் வளைத்து அமைத்தல் **'டமரு ஹஸ்தம்'** என்பர். நடராஜர் படிமத்தில் இதனைக் காணலாம்.


24) தாடன ஹஸ்தம்



பெருவிரல் முதல் சிறுவிரல் வரை எல்லா விரல்களையும் ஒன்றோடொன்று ஒட்டி, கட்டைவிரலைக் கைத்தல மட்டத்திலேயே அகல விரித்துச் சிறிது பின்னோக்கிச் சாய்த்து அமைக்கும் நிலைக்கு **'தாடன ஹஸ்தம்'** என்று பெயர்.

இரட்டைக்கைகள்

1) அஞ்சலி ஹஸ்தம்



அபய முத்திரையுடன் கூடிய வலது மற்றும் இடது கரங்களை மார்புக்கு முன்புறமாக இணைத்துப் பிடித்த இரட்டைக்கை அமைதிக்கு **'அஞ்சலி ஹஸ்தம்'** என்று பெயர்.

2) தியான ஹஸ்தம்




அமர்ந்த கோலத்தில் இடது கைத்தலத்தை மேல் நோக்கிய வாறு மடியில் வைத்து, வலது கைத்தலத்தையும் அவ்வாறே இடது கை மீது படிய வைத்திருக்கும் நிலைக்கு **'தியான ஹஸ்தம்'** என்று பெயர். தியான புத்தாதீர்த்தங்கரர் படிமங்களில் இதனைக் காணலாம்.

3) புஷ்பபுட ஹஸ்தம்



இரு கைகளிலும் வரத முத்திரை காட்டி, இரண்டையும் மார்புக்கு முன்னே நளினமாகப் பிடித்து, விரல் நுனிகளை உள்முகமாகச் சிறிது வளைத்து அமைக்கும் நிலைக்கு **'புஷ்பபுட ஹஸ்தம்'** என்று பெயர். இது மலர் கொண்டு வணங்கும் அடியவர் படிமங்களுக்கு ஏற்றதாகும்.

4) தர்மசக்கர ஹஸ்தம்



வலது புறங்கையை மார்பில் அணைத்து வைத்து, அபய முத்திரை போன்று விரல்களை நளினமாக வெளிமுகமாகப் பிடித்து, சுட்டுவிரலை மட்டும் முன்னோக்கி நீட்டி வளைத்து, இடது கையை வலது கையருகே அகக்கை உள்முகமாக அமையப் பிடித்து ஐந்து விரல்களையும் மேல் நோக்கி நீட்டி, வலக்கையும் இடக்கையும் அருகருகே அமையுமாறு அமைத்து, வலது கையின் சுட்டுவிரலால் இடது கை நடுவிரலை நெருங்கியிருக்குமாறு அமைத்து அறவிளக்கம் கூறும் பாவனையில் இருக்கும் முத்திரைக்கு **'தர்மசக்கர ஹஸ்தம்'** என்று பெயர். சாரநாத்தில் உள்ள புத்தர் படிமத்தில் இதனைக் காணலாம்.

எழிற்கைகள்

1) கஜ ஹஸ்தம்




கையை நேராக நீட்டி, மணிக்கட்டின் கைத்தலத்தை கீழ் நோக்கிச் சரித்து, தளிர்க்கை போன்று விரல்களை அமைத்து கம்பீரத் தோற்றத்துடன் அமைப்பது **'கஜ ஹஸ்தம்'** ஆகும். நடராஜர் படிமத்தில் இதனைக் காணலாம்.

2) தண்ட ஹஸ்தம்




கஜ ஹஸ்தத்தை முன்னோக்கி நீட்டியவாறு அமைப்பது **'தண்ட ஹஸ்தம்'** எனப்படும். இதனை ஐயனார் மற்றும் யோக, தியான கோலங்களில் காணலாம்.

3) டோல ஹஸ்தம்



இம்முத்திரையில் விரல்கள் பல்லவ முத்திரையில் கண்டவாறு தோளிலிருந்து நீட்டப்பெற்று தொங்கியமையும், இதனை **'டோல ஹஸ்தம்'** என்பர்.

4) பிராசாரித ஹஸ்தம்



புஜத்தை நேராக நீட்டி, கைத்தலத்தையும் விரல்களையும் பல்லவ முத்திரையுடன் கூடியதாக அமைக்கும் கை அமைதிக்கு **'பிராசாரித ஹஸ்தம்'** என்று பெயர். இதனை சயனக் கோல விஷ்ணுப் படிமத்திலும், கூத்தாடும் விநாயகர், கண்ணன், கந்தன், சம்பந்தர் படிமங்களிலும் எழிலாகக் காணலாம்.

குறிப்பு

சிற்ப, வாஸ்து நூல்களில் குறிக்கப்படும் சிற்பக்கைகள் மற்றும் பொதுவாகக் கட்டட அமைப்புகள், சிறப்பாகக் கோயில்கள் அங்கங்கள் யாவும் அளவு பிரமாணப்படி ஸ்தபதிகள் கைகளால் வரைவர். தற்போது கணினியின் அரிய பயன்பாட்டால் இவையனைத்தும் அக்கணினியிலேயே Auto cad - முறையில் வரைய முயற்சி செய்யப்பட்டு முதல் முயற்சியாக கணினி வடிவமைப்பு இங்கே தரப்பட்டுள்ளது. கட்டடப் பொறியாளர்களும், இயந்திரப் பொறியாளர்களும் Auto cad முறையில் வரைபடங்கள் வடிவமைப்பது போலத் தற்போது தொல்லியல் சார் கோயிற் சிற்பக்கலை, கட்டடக்கலை ஆகியன இவ்வாறு வடிவமைக்க முயற்சிப்பது குறிப்பிடத்தக்கது.

6

Exploration in around Kortalliyar river Basin

K. S. SAMPATH, Epigraphist,
S. SREEKUMAR, Technical Asst.

A systematic survey aimed to collect palaeolithic tools and study geology of the area was conducted in and around Kortalliyar river basin and Allikuli Hill ranges of Tiruvallur District. It was a preliminary survey to carry out excavation at Parikulam in the year 2005 – 06. A team of archaeologists conducted this survey for a period of three month. In the course of survey nineteen villages were explored and good number of palaeolithic tools were collected.

Mettupalayam

In the course of exploration at Mettupalayam fossil specimen was collected from the odai, known as Otteri(or) Muneaswaran Odai. One of them is undoubtedly a wood fossil while the other one might be bone of birds. Finding of such fossil throw light on the geological formation and Palaeo-climatic condition of this region. The specimen has been sent for identification of species and dating to G.S.I, Hyderabad.

Chenrayanpalayam

Exploration in the mounds of Chenrayanpalayam yielded core samples of Quartzite and Flake tools. On the basis of the collection it is ascertained that this site might be one of the important industry site. Since the site has been disturbed for laying road and agriculture, finding of tools are not noticed.

Parikulam

The exposure of stratigraphical layer of red soil with gavels, which is underlain by laterite soil were noticed. The laterite soil of this region might belong to Pleistocene period. Interestingly, a well-shaped Palaeolithic tool with good workmanship was collected here. It is an Acheulian type of tool of Madras Hand Axe Industry. In addition to this core samples, flake tools were also collected from Parikulam village, which is also one of the important factory sites of Acheulian type of tools.

Arumpakkam

In the other villages namely Ariyattur, Nambakkam and Rangapuram, flake tools and good number of Palaeolithic tools and rock specimens of Quartzite were collected. The laterite soil, laterite rock, conglomerate rocks are some of the geological formation encountered during exploration in this region. Quartzite pebbles with patination and exfoliation of pebbles throw light that the region witnessed alternate climatic condition of hot and wet. As far as the flora is a concerned, thorny bushes, shrubs and herbs are noticed here.

During exploration villages namely Thomur, Pudur, Narayanpuram, Odapai, Krishnapuram and Neyveli were explored and flake tools were collected. And, the exposures of stratigraphical layers were examined at the Narayanpuram, Odapai, Krishnapuram and Neyveli. Most of the areas are found to be disturbed for the agriculture purpose. The Quartzite pebbles found in various colours which is due to the impurities, were noticed during survey. The major flora of this region is cactus and herbs. Unlike the previous exploration, survey in this area has not yielded any fossil remains. However, it is ascertained that intensive survery in the river (or) rivulet beds might reveal occurrences of such organic remains, if any.

Beside this, villages namely Mailapur, Malathur, Kacchur, Gunipalayam, Kammavarpalayam and Nelvoy were also surveyed. In the course of exploration at Mailapur, flake tools were collected from the beds of Arni River. And the occurrences of laterite beds and soils were noticed. Here, the Palaeolithic tools are found embedded in the laterite formation. In the other villages core samples and flake tools were collected.

On the basis of flora and fauna it is ascertained that dry climatic condition had existed here and the absence of wild carnivorous animals was so favorable for the men to live in the caves located here. The occurrences of quartzite rock were so suitable to make implements for hunting hare, rabbit and rat. The finding of fossil specimen in the exploration from Mettupalayam infers that the environment existed here in the geological past was more conducive for fossilization of organic matters. On observation it is ascertained that this region had witnessed heavy rain (pluvial) and dry weather due to scorching heat. Also, it is understood that the presence of Gondwana formation is indicative of existed glacial condition.

◆)(◆)(◆

7

கலைகளில் ஓலைச்சுவடிகள்

அர. வசந்தகல்யாணி

கல்வெட்டாய்வாளர்/பதிவு அலுவலர்(பொ)

நம் நாட்டின் அரசியல், பண்பாடு, கலை வரலாறுகளை அறியப்பயன்பட்ட சான்றுகள் ஏராளம். அவற்றுள் கல்வெட்டு ஒரு முக்கியப் பகுதியாக அமைகின்றது. இக்கல்வெட்டுகளுக்கு இணையாக வைத்து எண்ணத்தக்கது ஓலைச்சுவடி. மிகப்பழங்காலந்தொட்டு எழுதப்படும் பொருட்களாகக் கல், களிமண், மரம், உலோகம், தந்தம், துணி ஆகியன பயன்பட்டாலும், மிகவும் எளிதாகக் கிடைப்பதும் எளிதாக எடுத்துச் செல்லக் கூடியதுமான ஓலையே அதிகம் பயன்படுத்தப்பட்டது. பனைஓலை, தாழை இலை ஆகியன எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

பத்ரம் என்பது ஓலை என்பதற்கான சமஸ்க்ருதச்சொல். ஆவணங்கள் அனைத்தும் ஓலையில் எழுதப்பட்டதால் அவ்ஆவணங்களே பத்ரம் என்று வழங்கப்பட்டது. தக்காணத்தில் தாலபத்ரம் என்றும், வடஇந்தியாவில் பூர்ஜபத்ரம் என்றும் பௌத்த இலக்கியங்களில் பன்னா என்றும் வழங்கப்பட்டன.

இலக்கியங்கள் அனைத்தும் முற்காலத்தில் ஓலைகளில் எழுதப்பட்டன. காலப்போக்கில் அவற்றுக்கு இயற்கைச் சிதைவு வரும்போது மீண்டும் பிரதிகள் எழுதிப் பாதுகாக்கப்படும். இப்படித் தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வந்த ஓலைச் சுவடிகளே தற்போது நமக்குக் கிடைப்பவை. இந்த ஓலையில் எழுதும் முறையை முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்று இலக்கிய நயத்தோடு அழகாக விளக்குகிறது.

"மருப்பூசியாக மறங்கனல் வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத் திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலை வேன்மாறன் களிறு"

யானையின் தந்தம் ஊசியாக அதாவது எழுத்தாணியாகவும் வேள்மன்னர் தம் மார்பு அவ்வெழுத்தாணியால் எழுதப்படும் ஓலையாகவும் கொண்டு வேள்மாறன் களிறு இந்த உலகமெலாம் எமதென்று எழுதிற்றாம். இவ்வாறு இலக்கிய நயம்பட ஏடும் எழுத்தாணியும் கூறப்படுதலைக் காண்கிறோம்.

"அறையோலை செய்து கொடுத்துவிடுதக என்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டாரும் திருமுகம் கண்டு தொழுது தலைக்கு வைத்துப் படாகை நடந்து" என்று அரசனது ஆணை தாங்கி வரும் ஓலைக்குக் கிடைக்கும் சிறப்பினைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பறைசாற்றுவதையும் அறிகிறோம்.

ஆக இத்தகையதொரு சிறப்பிடத்தைப் பெறும் ஓலைச்சுவடிகள் இலக்கியங்களாக, ஆவணங்களாக மட்டும் இருக்கவில்லை கல்வியின், அறிவின் சின்னமாகவே விளங்கிற்று. "புஸ்தகம் ஹஸ்த லக்ஷணம்" என்பது பழமொழி.

சுவடியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் பற்றியும், அவை கூறும் பொருள்பற்றியும், எழுதப்பட்ட எழுத்துகளின் வளர்ச்சிபற்றியும் பலவாறு கூறப்பட்டிருக்கலாம். ஆனால் இவற்றிலெல்லாம் சற்று மாறுபட்டுக் கலைகளில் அவை எவ்வாறு எங்கெங்கு ஏன் காட்டப்பட்டுள்ளன என்பதைப் பார்த்தால் அவற்றின் பெருமையும் சிறப்பும் பெறப்படுவதோடு சுவடி அறிவுலகத்தில் எத்தகைய உயரிய இடத்தைப் பெற்று வந்துள்ளது என்பதும் தெரியவரும்.

பொதுவாகக் கலைகள் என்னும்போது அவற்றின் பிறப்பிடம் தெய்வங்கள் என்பது வழக்கம். அறிவின் வித்தாகவும், கலைகளின் ஊற்றாகவும் திகழ்ந்த தெய்வத் திருவுருவங்கள் தத்தமது குணங்களுக்கு ஏற்றவகையில் கையில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் மாறுபடும். தத்துவப்பொருளைப் புகுத்தி முறையாகக் கடவுளரின் கைகளில் அவற்றைத் தவழவும் விட்டனர். சான்றாக ஒன்றிரண்டைக் குறிப்பிடுவோமானால் சங்கு, தாமரை போன்றவை வளமையையும் செல்வத்தையும் குறித்தன. சூலம் முக்குணத்தையும், அக்னி ஒடுக்கத்தையும், பாசம் மாயை வடிவத்தையும், நாகம் பாசங்களினின்று நீங்கிய தன்மையினையும் குறித்தன. தெரிந்த பொருட்களைக் கொண்டு அரிய கருத்துகளை உணர்த்தி நிற்றல் கலைமரபு. மேலும் அவை திருவுருவங்களின் குணத்தையும் தன்மையையும் உணர்த்தி நிற்கின்றன என்பதே உண்மையாகும். சூலமும், சக்தியும் அழிக்கும் கடவுளர் கையிலும் சங்கும் தாமரையும் செல்வம் அளிக்கும் கடவுளர் கையிலும், இருக்கும் போது அவ்வவற்றின் குணமும் பெறப்படுகின்றன அல்லவா. அவ்வகையில் தான் ஞானத்தையும் அறிவின் செறிவையும், ஆசிரிய நிலையையும் காட்டச் சில பொருட்கள் காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டன. அவற்றுள் அக்கமாலை, புத்தகம் (சுவடி) ஆகியன அடங்கும். குறிப்பாகச் சுவடி அறிவின் சின்னமாகவே கொள்ளப்படுகிறது.

அறிவின்பாற்பட்ட அனைத்துச் செயல்களோடும் தொடர்புடைய திருவுருவங்களும் சுவடி ஏந்திக் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் காண்போம்.

பிரம்மா

இவ்விறைவன் ஞானத்தின் தலைவனாகக் கொள்ளப்படுகிறான். ஸ்ருக், ஸ்ருவம், அக்கமாலை, புத்தகம் ஏந்தி இவ்விறைவன் காட்டப்படுவான். வேள்வியோடு தொடர்புடைய கடவுளுமாதலால் வேள்வியில் நெய் ஊற்றப் பயன்படும் மரக்கரண்டிகளும் காட்டப்படும். மிக அழகிய பிரம்மாவின் உருவமும், அவ்விறைவன் அக்கமாலை, புத்தகம் ஏந்தி ஞானக்கடவுளாகக் காட்சிதரும் எழிற்கோலமும் "திருவடி" என்ற ஊர்ச்சிவன் கோயிலில் காணப்படுகிறது.

சரஸ்வதி

இவள் பிரம்மனின் இருதேவியருள் ஒருவர். வாக்தேவியாக சரஸ்வதி வருணிக்கப்படும் பொழுதும் அவ்விதமே வணங்கப்படும் பொழுதும் அவளுடைய நான்கு கரங்களுள் ஒன்று புத்தகம் ஏந்திக் காணப்படும். அனைத்து மதமும் (இந்து, சமணம், பௌத்தம்) கல்விக்கடவுளாக ஏற்றுக் கொண்டுள்ள சரஸ்வதி வாக்தேவி, வாகீஸ்வரி, சரஸ்வதி, பாரதி என்ற வடிவங்களில் போற்றப்படும் பொழுது அவள் புத்தகம் ஏந்திய நிலையில் காட்டப்படுவாள். சரஸ்வதியின் உருவ அமைப்பைப் பற்றிச் சிவாகம நூல்கள் கூறுகின்றன.

"வெள்ளாடை அணிந்து வெண்தாமரை மீது அமர்ந்திருப்பாள். பின்வலக்கரத்தில் அக்கமாலையும், முன்வலக்கரத்தில் வியாக்யான முத்திரையும், பின் இடக்கரத்தில் வெண்தாமரையும் முன் இடக்கரத்தில் புத்தகமும் (சுவடி) விளங்கும். இவள் எண்ணையும் எழுத்தையும் கண்ணாகக் கொண்டவள். நால்வேதங்களையும் மூச்சாகக் கொண்டு தன் நான்கு நாவினாலும் உரைக்கின்றவள் என்று வர்ணிக்கப்படுகின்றவள். தமிழகத்தில் மிகப் பழமையான சரஸ்வதி சிற்பம் திருநெய்த்தானம் சிவன்கோயிலில் உள்ளது. மிக அழகிய சரஸ்வதி கங்கைகொண்டசோழபுரத்தில் காணப்படுகின்றது.

பிராம்மி

பிரம்மனின் இணையான இவள் சப்தமாதருள் முதலாமவள். இவள் மகிஷனோடு துர்கை போரிடும் போது பக்கத்துணைக்கென உருவாக்கப்பட்டவள். ஆயினும் இவள் ஞானத்தின் தலைவி அல்லவா. இவளுடைய திருக்கோலத்தில் அக்கமாலை, கமண்டலம், புத்தகம், அபயம் ஆகியன காட்டப்படும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக அக்காலத்தில் நூலகங்கள் அதாவது ஓலைச்சுவடிகள் சேகரித்து வைக்கப்படும் இடங்கள் சரஸ்வதி பண்டாரம் என்றே அழைக்கப்பட்டன என்பதும் மனங்கொள்ளத்தக்கது. திருவரங்கம், தில்லைக் கோயில்களில் சரஸ்வதி பண்டாரங்கள் செயல்பட்டு வந்தன எனக் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றன.

தட்சிணாமூர்த்தி

இவர் ஆன்மாக்களுக்கு ஞானத்தை அளிக்க வல்ல ஞானமூர்த்தி. பதி, பசு, பாசம் எனும் மும்மலத்தையும் விட்டொழித்தால் இறைவனை அடையலாம் என்பதைச் சின்முத்திரையில் காட்டுகின்ற ஞானக்கடவுள் ஆலமர் செல்வன். வியாக்யான ஞான, யோக வீணாதர தட்சிணாமூர்த்தி என்று வகைகள் கூறப்பட்டாலும் ஞான தட்சிணாமூர்த்தியே கையில் ஏடு ஏந்தி முனிவர்களுக்கு ஞானத்தை போதிப்பவராகக் காட்டப்படுவார். இந்த ஞானாசிரியரைச்சுற்றி சனகாதிமுனிவர்கள் அமர்ந்து பணிவோடு அவற்றைக் கற்கும் நிலையில் காட்டப்பட்டிருப்பர். இவர்கள் கற்பது பிறவிக்கடலிலிருந்து விடுபடும் ஆத்ம வித்தை. இவ்வாறு கையில் ஏடு ஏந்தி ஞானத்தைக் கற்பிக்கும் இந்த ஞானாசிரியனின் அழகிய சிற்பங்களைத் திருவொற்றியூர், காவேரிப்பாக்கம் போன்ற இடங்களில் காணலாம்.

சண்டேசர்

ஓலைச் சுவடியோடு மிகவும் தொடர்புடையவர் அதாவது சிவன்கோயிலில் சிவனுக்கு இடப்பக்கம் அமர்ந்து ஈசன் என்றே போற்றப்படும் சண்டி சிவன் கோயிற் கணக்குகளைச் சரிபார்ப்பவர்.

"தண்டீச்சுரன் ஓலை சாகரம் சூழ் வையகத்துக்
கண்டீச்சுரன் கருமம் ஆராய்க பண்டே
அறஞ் செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து"

என்று இறைவனின் கணக்குகளைப் பார்க்கும் கடவுளாக இருந்தாலும் சிற்பங்களில் இவர் கைகளில் ஓலைச்சுவடி காட்டப்படுவதில்லை.

பிள்ளையார் (அ) கணபதி

இவ்விறைவன் வியாசபாரதத்தை எழுதியவர் என்றும் எழுத்தின் இடையே எழுத்தாணி உடைந்து விட்டதால் தன் மருப்பையே ஆணியாக்கி எழுதியதாகப் புராண வரலாறு கூறும். அதன்படி இவ்விறைவனை அமைக்கும் பொழுது முன் வலக்கையில் ஒடித்த யானைத் தந்தத்தை எழுத்தாணியாக வைத்திருக்குமாறு காட்டுவர். ஆனால் இவருடைய பல வடிவங்கள் எதிலும் ஏடு ஏந்திக் காணப்படவில்லை.

மாணிக்கவாசகர்

இவர் ஞான மார்க்கத்தில் இறைவனை வணங்கிப் போற்றியவர் சமயக்குரவர் நால்வருள் ஒருவர். தாசமார்க்கத்திலும், பக்தி மார்க்கத்திலும், சக (நட்பு) மார்க்கத்திலும் முறையே அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆகியோர் இறையடி போற்றியவர்கள். மாணிக்கவாசகர் ஞான வழி கொண்டவர் என்பதால் இவருடைய திருவுருவங்கள் ஏடு ஏந்திய நிலையில் காட்டப்பட்டிருக்கும். இன்னும் பிற்காலச் சோழர் காலத்துச்

செப்புத்திருமேனிகளில் நமச்சிவாய சிவாய, நமச்சிவாய வாழ்க, திருச்சிற்றம்பலம் திருச்சிற்றம்பலம்பேர் என்று எழுதப்பட்ட சுவடியினை கையில் வைத்திருக்கும் கோலத்தையும் காண்கிறோம். ஒரு செப்புத்திருமேனியில் இவரது பாடலிலிருந்தே ஒரு வரி பொறிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுந்தரர்

மாணிக்கவாசகரைக் குறிப்பிடும் போது ஓலைச்சுவடியால் அடிமையான சுந்தரரைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இவரது வாழ்க்கை அடிமை வாழ்க்கை என்பதை உறுதிப்படுத்தியது ஓலைச்சுவடியே. கிழவேதியர் வடிவில் வந்து ஆட்சியில், ஆவணத்தில், அயலார் சாட்சியில் தான் அடிமை என்பதைக் காட்டுமாறு மணக்கோலம் பூண்ட சுந்தரர் கேட்க ஓலைச்சுவடி ஆவணத்தை இறைவன் எடுத்து நீட்டுகிறான். இதிலுள்ள எழுத்துகளைப் பழைய ஆவணங்களுடன் ஒப்பிட்டு ஒன்றாக இருப்பது கண்டு கிழவேதியருக்கு அடிமையாகச் சென்று ஆட்கொள்ளப்பட்ட சுந்தரர் கதை பெரிய புராணத்தில் கூறப்படுகிறது. இக்காட்சியை நம் கண்முன் கொணர்ந்து நிறுத்துகிறது. தஞ்சைப்பெருவுடையார் கோயிலிலுள்ள இராஜராஜன் காலத்து ஓவியங்கள். இதிலும் குறிப்பிடத்தக்க சிறப்பு வேதியர் வடிவில் நிற்கும் சிவனுடைய கையிலிருக்கும் ஓலைச்சுவடியில் "இப்படி நானறிவேன்" என்று எழுதப்பட்டிருக்கிறது என்பதும் இவ்வாசக எழுத்துகளின் எழுத்தமை. இராஜராஜன் காலத்திற்குத் துல்லியமாகப் பொருந்துகிறது என்பதுமே.

அகத்தியர்

இறைவடிவங்களில், ஞானக்கடவுளர்க்கு மட்டுமன்றி அடியவர்கட்கும், முனிவர்கட்கும் கூட ஏட்டுச்சுவடி காட்டப்பட்டது என்பதை முன்னர் மணிவாசகர் வழி அறிந்தோம். அதுபோல அகத்திய முனிவர் குறுமுனிவராக இருப்பினும் தென்னாடு போந்து பொதிகை மலையில் உறைந்து தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர். எனவே இந்த அறிவுத் திருவுரு கையில் ஏடு ஏந்திய நிலையில் முற்காலச் சோழர் கோயில்கள் பெரும்பாலானவற்றில் தெற்குப் பக்க அர்த்த மண்டபத் தேவகோட்டத்தில் வைத்து வழிபடப்பட்டு வருகின்றார். இராமேசுவரத்தில் வெள்ளைக்கல்லால் செய்த அகத்தியர் கையில் சுவடி உள்ளது. இது வடநாட்டுக் கலைப்பாணியாக வெள்ளைக்கல்லில் செதுக்கப்பட்டிருந்தாலும் அழகிய சிற்பத்திற்கான சான்று.

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இலங்கையில் கிடைத்த சிற்பம் ஒன்று நின்ற நிலையில் நீண்டதாடியுடன் இருகரங்கள் முழுதும் நீண்ட ஓலைச்சுவடி ஏந்திய நிலையில் உள்ளது. இதை இலங்கையை ஆண்ட பராக்கிரமபாகு என்றும், அகத்திய முனி என்றும், இன்னும் சிலர் திருவள்ளுவர் என்றும் கூறுகின்றனர். எவ்வாறாயினும் இது சிறந்த அறிஞர் ஒருவரின் உருவம் என்பது தெளிவு.

திருவள்ளுவர்

பொதுமறை தந்த வள்ளுவப் பெருந்தகையின் சிற்பம். அமர்ந்த கோலத்தில் ஏடும் எழுத்தாணியும் கரங்களில் ஏந்தியவாறு உள்ள ஒரு சிற்பம் அண்மையில் மயிலாப்பூரில் கிடைத்துள்ளது. இதனைத் திருவள்ளுவர் என்று கூறுகின்றனர்.

இந்து சமயம் தவிர பௌத்தமதத்திலும், சமணமதத்திலும் கல்விக் கடவுளாக சரஸ்வதியே போற்றப்படுகிறார். புத்தமதத்தில் ஐந்து வகையான சரஸ்வதி கூறப்படுகின்றனர். **1.மகாசரஸ்வதி, 2.வஜ்ரவீணாசரஸ்வதி, 3.வஜ்ரசாரதா, 4.ஆர்யசரஸ்வதி, 5.வஜ்ரசரஸ்வதி.** இவர்களுள் வஜ்ரசாரதாவும், வஜ்ரசரஸ்வதியும் கைகளில் ஏடு ஏந்தி நிற்பர். கல்விக்கடவுளர் இவர்கள். மற்ற சரஸ்வதி தேவியர் செல்வம், ஆகியவற்றை தருபவர்கள் என்பதால் அதற்குத் தகுந்த சின்னங்களைக் கையில் கொண்டிருப்பர். மேலும் புத்தருடைய நின்ற திருக்கோலங்கள் பலவற்றுள் வலக்கை வரதமுத்திரையிலும் இடதுகை சுவடி ஏந்தியும் காட்டப்பட்டிருக்கும். சமணச் சமயத்தோடு மிகப்பண்டையகாலத்திலிருந்து தொடர்புடைய கடவுள் சரஸ்வதி. கல்விக்கு ஏற்றம் கொடுத்தவர்கள் சமணர். அதனைப் போற்றிப்புரந்தவர்கள் பஞ்சபரமேஷ்டிகள் என்று உபாத்தியாயரையும் ஒருவராக்கி வணங்கியவர்கள். மேலும் சமணசமயத்தின் மூலமந்திரமான பஞ்ச மந்திரத்தில் மூன்றாவது மந்திரம் உபாத்தியாயர்களுக்கு வணக்கம் செலுத்துவதும் இங்கு நோக்கத்தக்கது. எண்ணுக்கும், எழுத்துக்கும், அறிவுக்கும், கல்விக்கும் மிகுந்த தொடர்புடைய வாழ்க்கை முறையினைக் கொண்ட சமணர் கல்வி கற்றலையும், கற்பித்தலையும் புண்ணியச்செயல்களாகக் கொண்டிருந்தனர். எனவே இவர்கள் கல்விக்கடவுள் சரஸ்வதியைப் போற்றுவது வியப்பில்லை.

சமணர் மகாசரஸ்வதியையும் பதினாறு வித்யாதேவியரையும் வணங்கினர். இவர்களுள் மகாசரஸ்வதி நான்குகரங்களில் தாமரை, வரதமுத்திரை, புத்தகம் ஏந்தியிருப்பாள். சில இடங்களில் ஏடும் எழுத்தாணியும் ஏந்தியும் காணப்படுவாள். இவள்தவிர வஜ்ராங்குசா என்ற வித்யாதேவி (16 வித்யா தேவியருள் நான்காமவள்) அங்குசம், வீணை, சுவடி ஏந்திப் புஷ்பக விமானத்தில் வருபவள். இந்த அமைப்பு முறைகள் சமணநூல்களில் குறிப்பிடப்படுகின்றன என்பது மட்டும் இங்கு குறிப்பிடத் தக்கசெய்தியல்ல. மற்றொரு முக்கியமான செய்தி.

"இதுகாறும் சுவடி ஏந்தி ஞானத்தைப் போதிக்கும் கடவுளர், அடியவர், முனிவர் ஆகிய சிற்பங்களுள் காலத்தால் மிகமிக முற்பட்ட சிற்பம் சமணர்தம் ஜைனசரஸ்வதி. இச்சிற்பம் மதுராவில் கிடைத்துள்ளது.

தலை இன்றிக் காணப்படும் இச்சிற்பம் தான் இந்தியாவில் இதுகாறும் கிடைத்துள்ள சரஸ்வதி சிற்பங்களுள் மிகப் பழமையானது. சமணச் சிற்பங்களில் பழமையானதும் இதுவே.

கி.பி. 132-ல் செய்தளிக்கப்பட்ட இச்சிற்பத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. கால்களைக் குத்திட்டுப் பீடத்தின்மேல் அமர்ந்த நிலையில்

இரண்டு கரங்களுடன் காட்டப்பட்டிருக்கிறாள். சரஸ்வதி என்றே கல்வெட்டில் குறிக்கப்படும் இத்தேவியின் இடதுகை ஏடு ஏந்திய நிலையிலும் வலதுகை வலக்காலின் முட்டி மீது வைத்தும் உள்ளது. மணிக்கட்டுக்குமேல் உடைந்துள்ள இக்கரத்தில் அக்கமாலை இருந்திருத்தல் வேண்டும்.

கல்விக்கடவுளை சரஸ்வதியை இத்தகு பழமைக் காலத்திலேயே அமைத்து வழிப்பட்டிருப்பதும் சிறப்பிடம் கொடுத்திருப்பதும் சமணர் அறிவுப்பூர்வமாக இருந்ததோடு இலக்கியப் பணியினையும் ஆற்றியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுவதாகவே அமைந்துள்ளது.

அதனால் தான் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சரஸ்வதிதேவியைச் சிற்பமாகப் படைத்து ஞானவிருத்தி செய்த சமணர் இன்றும் ஞானப்பீடமாக இருந்து வருகின்றனர். ஞான பூமி என்று போற்றப்படும் இந்தியாவில் மிக உயர்ந்த பரிசாகக் கருதப்படுவது ஞானபீடப்பரிசு. அப்பரிசின் சின்னமாக வாக்தேவி அமைக்கப்பட்டுள்ளாள். இந்தப்பிரதிமம் சமணத்திருக்கோலத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. சிரசின் பின்னால் பரமண்டலம் அதில் மூன்று ரேகைகள் புகழ்பூத்த மதுரா (கங்காலி) சமணத்தோரணமான ரத்னத்ரயத்தைக் குறிக்கிறது. வாக்தேவியின் கைகளில் கமண்டலம், பத்மம், அக்கமாலை, சுவடி காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் ஏடும் எழுத்தாணியும் கையில் கொண்டு எழுதும் ஓவியங்களும் சிற்பங்களும் கிடைத்துள்ளன. எனினும் கஜுராஹோ சிற்பங்களில் எழிலான கொடிப்பெண் ஒருத்தி ஏந்திநிற்கும் ஏடும் எழுத்தாணியும் நம் கண்ணைக் கவர்பவை.

சித்ரகுப்தன்

சரி! இறுதியாக "ஓலை வந்து விட்டது" கதை முடிந்து விட்டது என்பார்களே அதன் பொருள் என்ன? ஆம் யமன் கொண்டுவிட்டான், இறந்து பட்டான் என்பதல்லவா? யமன் தான் கணக்கை முடிக்கும் அதிபதி. ஆனால் அவனுக்குக் கணக்கெழுதி அவ்வப்போது கணக்குத் தீர்க்கச் செய்பவன் சித்ரகுப்தன் அல்லவா! தமிழகத்தில் அவனுக்கும் சிலைகள் இருந்துள்ளன என்பதற்குச் சான்றாக காஞ்சிபுரத்தில் சித்ரகுப்தனுக்கு என்றே ஒரு கோயில் உள்ளது. இக்கோயிலில் உள்ள சிற்பமும் செப்புத்திருமேனியும் கி.பி 15, 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றாலும் அவை மிகவும் அரிதான சிலைகள். நின்றநிலையில் இருகரங்களுடன் காட்டப்பட்டிருக்கும் அவனது இடக்கரம் ஏடு ஏந்தியும் வலக்கரம் எழுத்தாணி பிடித்தும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. சுவடி காட்டப்படுவதை இதுகாறும் பல சிலைகளிலும் பார்த்தோம். ஆனால் எழுத்தாணியும் சேர்த்து காட்டப்பட்டிருப்பது சித்ரகுப்தன் சிற்பத்தில் மட்டுமே என்பது சிறப்பு.

ஆக "புஸ்தகம் ஹஸ்தலக்ஷணம்" அதாவது ஞானம் வேண்டுமென்றால் புத்தகம் (சுவடி) கையில் வேண்டும் என்பதையே மேற்காட்டிய அனைத்து தெய்வங்களும் திருஉருவங்களும் விளங்குகின்றன. ◆

8

ANTIQUITY OF INDIAN LANGUAGES

K.V.S. Krishna, B.Sc,(Agri.)
Fellow, indian Socirty for Plantation Crops

SUMMARY

The paper adduces evidence that cognate words and Tamil sentences, numbering over 160 has been unearthed so far from Papua New Guinea. Along with other Indian languages, these words has been associated with the people who migrated some 80,000 to 70,000 years ago from across India to PNG to the present day (Totally uncontaminated with the development in rest of the world). The fact that these words exists in usage in the present Tamil speaking world and India, confirms its robust antiquity to at least 70,000 years of the spoken Tamil.

This paper gives fuller details corroborating "The Journey of Mankind"-The People of the World, a 1,00,000 years ago from Africa.

Why is language important?". Language is important because it is a way to express identity and proud of where they come from and who they are. If a person knows a word in their language he/she is maintaining a link that has lasted thousands of years, keeping words alive that have been used by their ancestors language is an ancestral right and it distinguishes something special about Aboriginal people from non-Aboriginal people. Language is a part of culture, and knowledge about culture is a means of empowering people. Language contributes to the well-being of Aboriginal communities, strengthens ties between elders and young people and improves education in general for Indigenous people of all ages", As stated by the Victorian Aboriginal Corporation for Languages.

One very important tool of mankind, which the anthropologists, paleontologists, and archaeologists have not used, is the unseen tool of spoken languages. Language is peculiar to our species: "We 'have' it and our nearest living relatives do not. Languages as we know it, is a means of thought and not just of

ation, and both language and intelligence in general are bound up with memory." States P.H. Mathews and he goes on to say "Languages as we know it must, however, have evolved in Homo sapiens alone and this population can be dated back to some 1,00,000y.a". And with this important tool, mankind ventured out of Africa years ago, reaching Middle East (Shanidar) 90,000y.a. Such people were "Anatomically Modern" with structurally modern languages, enabling them to migrate across the word.

Several huge batches of migrants reached India some 80,000 years ago.

The Majority of the people who reached India stayed on to consolidate themselves, but with rise in population, quite a number of people, over a period of time of say 10,000 years drifted to South China (70,000y.a) and another group moved on the Gangetic Valley to Myanmar, Malaysia, Indonesia and to Western Australia. The people, who went to South China, moved across to Philippines, from where they moved to Papua New Guinea 40,000y.a. and quite a number of them went south. into Eastern Australia. These people carried with them the languages that were crystallized, while they were in India to what could be called preharappan. Over a period of another 40,000 years since they left India, their languages got diversified modified and become endemic in certain region like Indonesia, Australia and Papua New Guinea. They also missed the Iron Age, Bronze Age. Stone Age etc and they could not get any feed back while the world developed script of various languages, they were left behind. The people having formed various endemic groups, had their languages modified forming some 750 languages (now mostly extinct). They are now considered the most heterogeneous group of people in the world. Their ancestors did not have any metallic tools to engrave on stones. They missed the invention of the wheel, pottery, weaving cloth. They become good hunters and gatherers.

However, these people whom we now call Papua New Guinea Nationals as well as those who went to Australia, who are called Aborigines have been worshippers of their ancestors; tradition and culture. It appears even today, those cultural links are still there from the distant past. Most of the words and languages they spoke then got bound to them some 70,000/60,000y.a. while in India, went with them, into Papua New Guinea and Australia. The words and language coined as long back as seems to continue in Tamil, Telugu, Hindi, Sanskrit and other language even today in these countries like PNG and Australia. To come to this opinion one

has to consider that the later development of S.E. Asia and Indonesia in the last 3,000 years due to the Influences of Indian Kings, Scholars etc including the spread of Buddhism, Hinduism and Islam did not touch PNG or Aborigines of Australia. Names found in the great Indian epics are practically absent. Further the absence of construction of the stone temples or any script is indicative of the absence of their impact. Papua New Guinea was explored in the coastal areas from 1511 to 1528 and was recognized as "Island of Gold" Nothing much transpired till, in 1884, when the British established a protectorate over south of PNG, while the Dutch took charge of the western island as Iryan Jeya in 1887, After world was II, Australia governed till 1975 when PNG gained independence. One very important administrative step taken by the British and Australia was that they did not name places, villages, rivers and mountains with western names (which may be less than 2%). They made enquiries among the inhabitants to retain the name they proposed, whereas, when names were proposed for the then new colony of Australia almost 70 to 75% were given western names retaining Aborigine names for the rest. This then is the rich treasure trove the British left, to verify the native name for Indian names could only be verfied by a person knowing Tamil, Telugu, Sanskirt, Hindi and other. Indian languages. This paper is, therefore, the first step in this direction. The author was fortunately involved with PNG for 7years, with 4 years having been spent at PNG, getting closely involved with its people and name of places sounding mostly like south Indian languages (1983-90). 80 Hindi/Sanskrit and other language of Indian origin. Or in other words, a total of 331 names out of 1667 or comes to 19.85% If the balance

A recent study (appeared in May 16-31, 2007 Issue of Madras Musings) was followed by a write up in Madras Musings dated September 16-30-2008 regarding existence of Indian surnames of Tamil, Telugu and Sanskrit in PNG. As indicated therein regarding the existences of name of places, village, rivers, and mountains, an on going in depth study was completed with a table top study of a detailed map of PNG, yielded 1667 names of places, rivers, and mountains of which 165 had Tamil origin, 86 of Telugu origin and 80 Hindi/Sanskrit and other language of Indian origin. Or in other words, a total of 331 names out of 1667 or comes to 19.85%. If the balance names are screened for other language of India perhaps over 100 name could also be found and with the help of other countries like Myanmar, Thailand, Indonesia, more names of their language could be found. The languages of today would carry the language/words picked on the migratory route of man.

The people of PNG have been there for over 40,000 Years and the Aborigines have traveled through Indonesia and PNG to Australia carrying with

them the heritage which as in existence around 40 to 50,000y.a. without being tampered by other future civilizations including all civilizations adopting script with the earliest being the cuneiform writing which was invented some 5000y.a. in the middle east. This situation throws views about number spoken language which is currently in use in India and the surfacing of such language as ethnic names or even surnames, what it denotes is that the continuous existence of the spoken words for such long times could aid archaeological work which depends on tools, stone carvings to fossils of bones to newer horizons of putting to use the spoken language as well. This with DNA analysis will improve the results etc.

A view point: Like DNA markers which indicate how long back man migrated from one region to another, the spoken language, the skills of which is about 1,00,000 years old, also leaves markers. In this case study it is found that some 15.05% of Tamil and Telugu words and 4.75% of Hindi/Sanskrit words being discovered as names of places in PNG, is indicative of these populations to hold on to some of these words for so long, though the meanings may be different now. It gives some proof that the spoken words of Tamil, Telugu and Hindi of the preharappan people are as old as 60,000/ 70,000years or more.

Ganga Powell's view that when you over hear aborigines speak, it sounds like Tamil, confirms that Aborigines retain their lauguages in remarkable, glossarial, phonetic and grammatical affinities with Tamil as quoted by Ramanathan from Dravidian studies. The similarity of Aborigine people and lauguages with that of PNG may be the reason for so many Tamil sounding words to exist in PNG as enumerated in this paper. This is yet corroborative evidence to what is stated in this paper. The need of the hour is more basic research, taking it to the heartland of the aborigines in Australia.

Counter View point: There can be a viewpoint that these words adopted for names, in PNG are coincidental and verification of the meaning of the words from the point of view of scholars of PNG needs to be worked on, So, this paper needs to be, at this stage, considered as a hypothesis. Incidentally, the word "Po" in Tamil also means go in PNG. Then, there is another word "Kittappa" meaning near father in Tamil which means father-in law in PNG. Research in this direction is indicated.

I am grateful to Mr. S. N. Mahalingam for studying Tamil meaning names. Prof. C.V.Chandersekher for Sanskrit and Hindi, Prof.V.Ranganathan for study of manuscript and making power point presentation slides along with V.B.Vijay. My appreciation to Ganga Powell for contacting aboriginal leaders in Victoria, Australia to secure CD on how their speaking resembles Tamil and commonalities between Tamil and their languages. The support given from time to time by S.Muthiah of "Madras Musings" for accepting and publishing articlales concerning antiquity of Indian languages is acknowledges. I thank several of my frinds for encouraging me to take up this work. I wish to thank **T.S.Sridhar**, IAS, Principal Secretary and Commissioner to the State Department of Archaeology, Chennai for initiative to support this paper, but for which this pioneering work would not have taken place.

References :

- In Papua New Guinea, Christina Dodwell, Picador, 1983 Bundi-The culture of PNG people, John Kimbuna, Ryeback Publications, 1983.
- Map of Papua New Guinea, scale 5cm=70km, prepared by cartography unit, Uniiversity of Papua New Guinea, printed by central mapping authority, NSW, Australia.
- Socicty and Environmcnt Atlas, Jacaranda National Curriculum cdition, John Wiley and Sons, Australia, 1999.
- Linguistics – A very short introduction by P.H.Mathews, Oxford University Press, 2003.
- Jounery of Mankind-The people of the world, Stephan Oppenhiemer.

PROVINCE WISE DISTRIBUTION OF INDIAN WORDS AT PNG TO TOTAL NAMES AND PERCENTAGE

S.No	Provinces of PNG	Tamil	Telugu	Hindi ETC	Total	Total PNG	Percentage
1.	Enga Province	6	1	-	7	34	20.5
2.	Western highland Province	2	1	1	4	35	11.4
3.	Chambu Province	2	1	1	4	22	18.2
4.	Eastern highland Province	4	2	4	10	39	25.6
5.	Southern highland Province	7	3	6	16	83	19.3
6.	Morobe Province	13	5	-	18	115	15.6
7.	Western Province	8	7	3	18	103	17.4
8.	Gulf Province	17	3	4	24	93	25.8
9.	Nothern Province-Oro	11	6	4	21	91	23.0
10.	Nothern Capital District	14	8	6	28	134	20.0
11.	Mine bay Province	11	8	8	27	166	16.2
12.	Madang Province	5	2	10	17	93	18.3
13.	Eastern Sepik Province	14	7	4	25	103	24.2
14.	Western Sepik Province	12	7	5	24	103	23.3
15.	Manus Province	6	2	6	14	30	46.6
16.	West New Britain Province	14	7	8	29	114	25.6
17.	East New Britain Province	5	4	3	12	77	15.3
18.	New Ireland Province	8	6	2	19	137	13.8
19.	North Soloman (Bougainvile)P	6	6	5	14	95	14.7
		165	86	80	331	1667	19.8

கோட்டைப்பட்டி வணிகக்குழு - கல்வெட்டு

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம் கோட்டைப்பட்டி என்ற கிராமத்தில் இக்கல்வெட்டு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. குளித்தலையிலிருந்து மணப்பாறை செல்லும் சாலையில் குளித்தலையிலிருந்து தெற்கே 30 கி.மீ. தொலைவிலும் மணப்பாறையிலிருந்து வடக்கே 10 கி.மீ. தொலைவிலும் சாலையின் கிழக்குப் பக்கத்தில் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இவ்வூரின் மேற்குப்பக்கத்தில் கோட்டைமேடு என்று அழைக்கப்படும் பண்டைய மக்கள் வாழ்விடம் காணப்படுகிறது. அக்கோட்டைமேட்டின் அருகே ஊரின் மூன்று வழிச் சந்திப்பில் இக்கல்வெட்டு தனிக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது.

கோட்டைப்பட்டி, பாதிரிப்பட்டி, வீரநாயக்கன்பட்டி ஆகிய மூன்று ஊர்களின் சந்திப்பில் இக்கல்வெட்டு உள்ளது. ஒரு பக்கத்தில் கல்வெட்டும் வணிகக்குழுச் சின்னங்களான குறுவாள், சுருள் கத்தி, அரிவாள், உரி, மயில் அன்னம், புலி, குத்துவிளக்கு, வாள், சுமைதாங்கி, கவை ஆகியவற்றுடன் கொடியும் புடைச் சிற்பங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்களின் மேல் பகுதியில் தலைகீழாக நடப்பட்டுள்ள வாள் புடைச் சிற்பமாகக் காட்டப்பட்டு அதன் மேல்புறத்தில் இரண்டு வரிகளில் கி.பி.12-13-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு வாசகம்

1. ஸ்வஸ்திஸ்ரீ மூந்று கூற்று நல்
2. லூர்

இக்கல்வெட்டின் கீழ் பொறிக்கப்பட்டுள்ள ஆயுதங்களையும், சின்னங்களையும் கொடியினையும் கொண்டு செல்வாக்குப் பெற்ற வணிக்குழுக்கள் இவ்வூரில் இருந்துள்ளதை அறிய முடிகிறது. பிரம்மதேய நல்லூரான இவ்வூரில் மூன்று பிரிவினைச் சேர்ந்த வணிகக் குழுக்கள் தங்கியிருந்து வணிகம் மேற்கொண்டதை இக்கல்வெட்டினைக் கொண்டு உறுதி செய்யலாம். தற்போது கண்டறியப்பட்டுள்ள இவ்வணிகக்குழுக் கல்வெட்டு, கரூரிலிருந்து உறையூர் செல்லும் கொங்கப் பெருவழிக்கு அருகிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியில்கி.மு.4-ஆம் நூற்றாண்டு தொடங்கிச் சிறப்புற்று விளங்கிய வணிகம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பரந்துபட்ட வணிக மண்டலமாக உருவாகி கி.பி. 12-13ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்கோடு இருந்ததை இக்கல்வெட்டு காட்டுகின்றது.

நாக. கணேசன்,
தொல்லியல் துறை, கரூர்

துறை நிகழ்வுகள்

25 – 11 – 2008


தமிழ்நாடு வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க மாநிலம். இங்குள்ள ஏராளமான கோயில்களும், வரலாற்றுச் சின்னங்களும் தமிழகத்தின் பெருமைகளை உலகிற்கு உணர்த்தி வருகின்றன. இந்த அரிய கலைப் பொருட்களையும், கோயில்களையும், வரலாற்றுச் சின்னங்களையும் போற்றிப் பாதுகாக்கும் பணியினைத் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை செய்து வருகின்றது. அவ்வகையில் தமிழக வரலாற்றுச் சிறப்புகளை உலகமக்கள் அனைவரும் அறியும் வகையிலும், அவற்றைப் பாதுகாக்கும் துறைப் பணிகளை வெளிப்படுத்தும் எண்ணத்திலும் இணையதளம் தொடங்குதல் வேண்டும் என்ற உந்துதல் காரணமாகத் துறையின் இணையதளம் 25-11-2008 அன்று தமிழகக் கல்வித்துறை அமைச்சர் **மாண்புமிகு தங்கம் தென்னரசு** அவர்களால் தொடக்கி வைக்கப்பெற்றது. மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை நூல்களை வெளியிட்டுப் பாறை ஓவியங்கள் நிழற்படக் காட்சியினைக் கண்டுகளித்து உலக மரபு வார விழாவினை நிறைவு செய்தார்கள். அவ்வமயம் உயர் அலுவலர்கள் முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,** முனைவர் **சாந்தினிகபூர், இஆப,** மற்றும் முனைவர் **க.அருள்மொழி, இஆப,** ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

24 – 12 – 2008


தொல்லியல் துறை மாதந்தோறும் நடத்திவரும் திங்கட்பொழிவு 24-12-2008 அன்று நடைபெற்றது. முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,இஆப,** அவர்கள் தலைமையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை மேனாள் தலைவர் (ம) பேராசிரியர் முனைவர் **சா.குருமூர்த்தி** அவர்கள் சிந்துவெளிப் பண்பாடும் தமிழர் பண்பாடும் என்ற தலைப்பில் பானையோட்டுக் குறியீடுகள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். தொல்லியல் அலுவலர் முனைவர் சொ.சாந்தலிங்கம் வரவேற்புரை அளித்தார். கல்வெட்டாய்வாளர் திருமதி அர.வசந்தகல்யாணி நன்றியுரை வழங்கினார்.

25 – 02 – 2009

பிப்ரவரி மாதத்தின் திங்கட்பொழிவு தொல்லியல் துறையின் முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,இஆப.** அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கப்பெற்றது. திரு.**கே.வி.எஸ். கிருஷ்ணா** அவர்கள் ‘Antiquity of Indian Languages’ என்ற தலைப்பில் பப்புவா நியுகினியாவிலுள்ள மக்கள் மொழியுடன் கலந்து காணப்படும் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்குச் சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருள் பற்றியும் தொல்மாந்தரின் புலம் பெயர்வு குறித்தும் படக்காட்சியுடன் விளக்கமளித்தார்கள். கல்வெட்டாய்வாளர் திருமதி அர.வசந்தகல்யாணி நன்றியுரை வழங்கினார்.



பிட்சாடனர் சிற்பம் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டு
மேலமங்கை நல்லூர்



டென்மார்க் நாணயங்கள் - மோதிரம்



சரஸ்வதி - மதுரா